அக்டோபர் 2026

இரண்டாம் பதிப்பு

(Issue 2 of 2)

மாதம் இருமுறை
வெளியாகும்
சட்டத் தீர்ப்பு தொகுப்பு

# LIS MEME

(A Tamil Legal Digest)

சட்டம் எளிமையாக புரியட்டும்!




உயர்நீதிமன்றம் & உச்சநீதிமன்றத்தின்

## 15 முக்கிய தீர்ப்புகள்

எளிய தமிழில்
சட்ட விளக்கம்

சட்டக் கருத்துகளை
நினைவில் நிறுத்தும்
MEME-கள்

இலவச
டிஜிட்டல்
வெளியீடு



உயர்நீதிமன்றம் & உச்சநீதிமன்றத்தின்
கோர்ந்தெடுக்கப்பட்ட தீர்ப்புகள்

“ சட்டம் எளிமையாக புரியட்டும்;
**MEME** மூலம் மனதில் நிலைத்திருக்கட்டும்! ”

# LIS MEME

## சட்டம் எளிமையானது!

*அக்டோபர் 2026 – இரண்டாம் பதிப்பு / முன்னுரை*

**அன்பான வாசகர்களுக்கு,**

சட்டம் என்பது வெறும் புத்தகங்களில் அடைபட்டுக் கிடக்கும் வார்த்தைகள் அல்ல — அது நம் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் உயிர்ப்புடன் இயங்கும் ஒரு கருவி. ஆனால் அந்தக் கருவியை பயன்படுத்தத் தெரியாத வரை, அது இருந்தும் இல்லாமல் போகும். இந்த உண்மையை மனதில் கொண்டே, "LIS MEME" என்ற இந்த தொகுப்பு உருவானது — சட்டத்தை எளிமையாக, சுவாரஸ்யமாக, அனைவரிடமும் கொண்டு செல்லும் ஒரு புதிய முயற்சியாக.

---

### LIS MEME — என்ன, எப்படி, எங்கே?

"LIS MEME" மாதம் இருமுறை — முதல் பதிப்பு, இரண்டாம் பதிப்பு என — ஆண்டுக்கு 24 பதிப்புகளாக வெளியாகிறது. ஒவ்வொரு பதிப்பிலும் சென்னை உயர்நீதிமன்றமும் இந்திய உச்சநீதிமன்றமும் வழங்கிய புதிய, நடைமுறைக்கு உதவும் 15 **தீர்ப்புகள்** தேர்ந்தெடுக்கப்பட்டு, **தமிழில் எளிய விளக்கத்துடனும்**, சட்டக் கருத்தை நகைச்சுவையாக உணர்த்தும் MEME-உடனும் வழங்கப்படுகின்றன. சட்டம் கடினமாக இருக்க வேண்டியதில்லை — அது சிரிக்கவும் வைக்கலாம், சிந்திக்கவும் வைக்கலாம்!

இந்த தொகுப்பு **ஆன்லைனில் மட்டுமே** வெளியிடப்படும் — இணையதளம், Facebook, WhatsApp உள்ளிட்ட டிஜிட்டல் தளங்கள் வழியாக அனைவரும் இலவசமாகப் பெறலாம்; எங்கிருந்தும், எந்நேரமும் படிக்கலாம்.

*~Budding Lawyers | LIS MEME ~*

## இந்தப் பதிப்பில்…

அக்டோபர் மாத இரண்டாம் பதிப்பில் **உச்சநீதிமன்றத்தின் 8 தீர்ப்புகளும்**, **சென்னை உயர்நீதிமன்றத்தின் (மதுரைக் கிளை உட்பட) 7 தீர்ப்புகளும்** இடம்பெற்றுள்ளன. இம்முறை **கிரைய ஒப்பந்தங்களும் ஏற்றதை ஆற்றக் கோரும் வழக்குகளும்** முக்கிய இடம் பிடிக்கின்றன — காலம் ஒப்பந்தத்தின் சாரமா, தயார்நிலையும் விருப்பமும் எவ்வாறு நிரூபிக்கப்பட வேண்டும், உண்மைகளை மறைத்து வழக்கு தொடுத்தால் என்ன விளைவு, ரத்து செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் விளம்புகை பரிகாரம் அவசியமா, பதிவு செய்யப்படாத ஆவணத்தை சான்றாக ஏற்கலாமா என ஐந்து தீர்ப்புகள் இந்தப் பரிகாரத்தின் பல கோணங்களை விளக்குகின்றன. அவற்றுடன் —

✦ **சொத்து மற்றும் பாகப்பிரிவினை** — முதல் நிலை தீர்ப்பாணையை நிறைவேற்றுதல், 1956-க்கு முந்தைய பாகப்பிரிவுச் சொத்தின் தன்மை, நிறைவேற்று நிலையில் எழுப்பப்படும் புதிய ஆட்சேபனைகள்

✦ **குற்றவியல்** — SC/ST சட்டத்தில் "பொது மக்கள் பார்வைக்குள் உள்ள இடம்" என்ற கூறு; வீட்டிற்குள் நிகழ்ந்த வரதட்சணை மரணத்தில் இந்திய சாட்சியச் சட்டம் சட்டப்பிரிவு 106

✦ **குடும்பம்** — மத்தியஸ்த சமரசத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக விலகுதலும், சரத்து 142-ன் கீழ் திருமணக் கலைப்பும்

✦ ***மின்னணு சான்று*** — Bharatiya Sakshya Adhiniyam சட்டப்பிரிவு 63(4)-ன் கீழ் Hash Value மற்றும் நிபுணர் சான்றிதழ்

✦ ***பிற*** — Benami சட்டமும் கட்டளை VII விதி 11-ம்; Mediclaim தொகையும் மோட்டார் விபத்து இழப்பீடும்; காலவரையத்தால் பாதிக்கப்பட்ட கடனுக்கான காசோலை

---

## ஒவ்வொரு தீர்ப்பிலும் என்ன இருக்கும்?

ஒவ்வொரு தீர்ப்பு சுருக்கமும் இந்த கட்டமைப்பில் வழங்கப்படும் —

✦ சட்டக் கேள்வி — வழக்கின் மையப் பிரச்சனை என்ன என்று தெளிவான தலைப்பாக

✦ வழக்கு விவரம் — யார், என்ன கூறினார்கள், நீதிமன்றம் என்ன கண்டறிந்தது

✦ முன்னோடி தீர்ப்புகள் — நீதிமன்றம் மேற்கோள் காட்டிய முக்கியமான வழக்குகள்

✦ சட்டக் கோட்பாடு — இறுதி முடிவும் அதன் தாக்கமும்

✦ LIS MEME — சட்டக் கருத்தை உணர வைக்கும் படைப்பு நகைச்சுவை மீம்

## இந்த பயணம் பற்றி…

வழக்காடுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல், சட்டத்தை சாமானியர்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஆசை எப்போதும் இருந்து வந்தது. அதன் ஆக்கப்பூர்வமாக **"Budding Lawyers"** என்ற Facebook பக்கம் மூலம் தினமும் தமிழில் தீர்ப்பு சுருக்கங்கள் வெளியிட்டு வருகிறேன். அதனை தொகுத்து அனைவருக்கும் சென்று வழங்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இந்த LIS MEME தொகுப்பு. எனது நோக்கத்தின் இன்னொரு படிக்கட்டு.

## யாருக்காக இந்த தொகுப்பு?

LIS MEME பயனுள்ளதாக இருக்கும் —

✦ இளம் வழக்கறிஞர்களுக்கு — நடைமுறை வழக்குகளில் சட்ட ஆதாரமாக பயன்படுத்த

✦ மூத்த வழக்கறிஞர்களுக்கு — புதிய தீர்ப்புகளை விரைவாக அறிய

✦ சட்டம் படிக்கும் மாணவர்களுக்கு — தத்துவத்தை நடைமுறையுடன் இணைக்க

✦ சாமானிய மக்களுக்கு — தங்கள் உரிமைகளை தமிழில் அறிந்துகொள்ள

✦ சமூக ஊடக பயனர்களுக்கு — சட்டத்தை சுவாரஸ்யமான MEME வழியாக அறிய

---

**நன்றி...**

இந்த தொகுப்பை படிக்கும் ஒவ்வொரு வாசகருக்கும் நன்றி. Budding Lawyers பக்கத்தை தினமும் பின்தொடரும் அனைவருக்கும், சட்ட விழிப்புணர்வில் என்னுடன் கை கோர்க்கும் தோழர்களுக்கும் — உங்கள் ஆர்வமே என் ஊக்கம். ஒவ்வொரு பதிப்பையும் எதிர்நோக்கிக் காத்திருக்கும் வாசகர்கள்தான் இந்தப் பணியைத் தொடர வைக்கும் சக்தி.

"சட்டம் தெரிந்தால் வாழ்க்கை எளிதாகும்; MEME பார்த்தால் சட்டம் மறக்காது!" — இந்த நம்பிக்கையே ***LIS MEME***-ன் ஆதார வேர். இந்த பயணம் தொடரும்; ஒவ்வொரு பதிப்பும் புதிய வெளிச்சம் தரும்.

Adv. V. Satheeskumar, B.E., B.L.,

*Budding Lawyers | LIS MEME*

# LIS MEME
# (A Tamil Legal Digest)

## அக்டோபர் 2026 — தீர்ப்பு தொகுப்பு அட்டவணை

### உயர்நீதிமன்றம் & உச்சநீதிமன்றம் — தேர்ந்தெடுத்த 15 தீர்ப்புகள்

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலம் முடிந்த பிறகும், விற்பனை-யாளர் கூடுதல் முன்பணம் பெற்று காலத்தை நீட்டித்-திருந்தால், பின்னர் "காலம்-தான் ஒப்பந்தத்தின் சாரம்" என்றும், வாங்குபவர் தயாராக இல்லை என்றும் கூறி ஏற்றதை ஆற்ற மறுக்க முடியுமா? | சென்னை உயர்நீதிமன்றம் | A.S. No. 924 of 2018 | 1 |
| 2 | ஒரே சொத்திற்காக தொடர்ந்து பல விற்பனை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பதும், வாதி உண்மைகளை மறைத்து நீதிமன்றத்தை அணுகியிருப்-பதும் நிரூபிக்கப்பட்டால், ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கில் அந்த பரிகாரத்தை வழங்க முடியுமா? அவ்வாறு மறுக்கப்படும் நிலையில், மாற்றுப் பரிகாரமாக முன்-பணத்தை திருப்பித் தர | சென்னை உயர்நீதிமன்றம் | A.S. No. 30 of 2026 | 6 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | நீதிமன்றம் உத்தரவிட முடியுமா? | | | |
| 3 | நீதிமன்றத்தின் முன் மத்தியஸ்-தத்தின் மூலம் எட்டப்பட்ட சமரச ஒப்பந்தத்தை ஏற்றுக்-கொண்டு அதன் பலன்களைப் பெற்ற பிறகு, ஒரு தரப்பினர் ஒருதலைப்பட்சமாக அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகி குடும்ப வன்முறைச் சட்டத்-தின் கீழ் புதிய வழக்கைத் தொடர முடியுமா? மேலும், அத்தகைய சூழ்நிலையில் உச்சநீதிமன்றம் அரசியல-மைப்புச் சட்டம் சரத்து 142-ன் அதிகாரத்தை பயன்படுத்தி திருமணத்தை கலைக்க முடியுமா? | உச்சநீதிமன்றம் | Criminal Appeal No. 1924 of 2026 (Arising out of SLP (Crl.) No. 1878 of 2026) | 12 |
| 4 | பட்டியலினச் சாதியினரை சாதிப் பெயர் கூறி இழிவுபடுத்தியதாக குற்றம் சாட்டப்படும் போது, அந்தச் சம்பவம் “பொது மக்கள் பார்வைக்குள் உள்ள இடத்-தில்” நடந்தது என்பது முதல் தகவல் அறிக்கையிலேயே தெளிவாக இல்லையெனில், | உச்சநீதிமன்றம் | Criminal Appeal No. 2446 of 2026 (Arising out of SLP (Crl.) No. 9198 of 2025) | 17 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | SC/ST (Prevention of Atrocities) Act-ன் கீழ் குற்றவியல் நடவடிக்கை தொடர முடியுமா? | | | |
| 5 | பாகப்பிரிவினை வழக்கில் வழங்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையில் தரப்பினரின் பங்குகள் அறிவிக்கப்பட்டு, சொத்தைப் பிரிக்க முடியாவிட்டால் ஏலம் விட வேண்டும் என்ற வழிமுறையும் குறிப்பிடப்பட்டிருந்தால், அதை இறுதித் தீர்ப்பின்றி நிறைவேற்ற முடியுமா? | உச்சநீதிமன்றம் | Civil Appeal Nos. .... of 2026 (Arising out of SLP (Civil) Nos. 8716–8717 of 2026) | 22 |
| 6 | வரதட்சணை கொடுமையால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்ட மனைவி வீட்டிற்குள் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்திருந்தால், மருத்துவ ஆதாரங்கள் அது தற்கொலை அல்ல; கொலை செய்து பின்னர் தூக்கில் தொங்கவிடப்பட்டதாக நிரூபிக்கும்போது, கணவர் எந்த விளக்கமும் அளிக்காமல் மௌனமாக | உச்சநீதிமன்றம் | Criminal Appeal No. 1803 of 2014 | 27 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | இருந்தால், அவரை கொலைக் குற்றத்திற்கு பொறுப்பாக்க முடியுமா? | | | |
| 7 | ஒருவர் தனது பணத்தில் வேறொருவரின் பெயரில் வாங்கப்பட்ட சொத்தை, பின்னர் அந்த நபர் எழுதிய உயிலின் அடிப்படையில் உரிமை கோரி வழக்கு தொடரும்போது, அந்த வழக்கை Prohibition of Benami Property Transactions Act-ஆல் தடை செய்யப்பட்டதாகக் கூறி உரிமையியல் நடை-முறைச் சட்டம் கட்டளை VII விதி 11-ன் கீழ் தொடக்க நிலையிலேயே நிராகரிக்க முடியுமா? | உச்சநீதிமன்றம் | Civil Appeal No. 7370 of 2026 (Arising out of SLP (C) No. 7924 of 2024) | 33 |
| 8 | 1956-க்கு முன் பாகப்பிரிவில் கிடைத்த சொத்து என்பதால் மட்டும் அது தனிச்சொத்தாக மாறிவிடுமா, அல்லது குடும்பத்தினர் அதனை கூட்டுக் குடும்பச் சொத்தாக நடத்தினால் அதன் இயல்பு தொடருமா — அத்தகைய | சென்னை உயர்நீதிமன்றம் | A.S. No. 917 of 2024 & C.M.P. No. 24109 of 2024 | 38 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | சொத்தில் எழுதப்பட்ட உயில் செல்லுமா? | | | |
| 9 | மோட்டார் விபத்தில் காயமடைந்தவர் தனது Medi-claim காப்பீட்டின் மூலம் மருத்துவச் செலவை ஏற்கனவே பெற்றிருந்தால், அதே மருத்துவச் செலவிற்காக மோட்டார் வாகனச் சட்டம் சட்டப்பிரிவு 166-ன் கீழ் கோரப்படும் இழப்பீட்டி-லிருந்து அந்தத் தொகையை கழிக்க முடியுமா? | உச்சநீதிமன்றம் | Civil Appeal No. ... of 2026 (Aris-ing out of SLP (Civil) No. 18267 of 2025) | 43 |
| 10 | Bharatiya Sakshya Adhiniyam, 2023-ன் சட்டப்பிரிவு 63(4)-ன் கீழ் மின்னணு ஆவணங்களை நீதிமன்றத்தில் சான்றாக தாக்கல் செய்ய, Hash Value மற்றும் நிபுணரின் சான்றி-தழை கட்டாயமாகக் கோரு-வது அரசியலமைப்புக்கு முரணானதா? | உச்சநீதிமன்றம் | Writ Petition (Civil) No. 599 of 2026 | 48 |
| 11 | காலவரையத்தால் பாதிக்கப்-பட்ட கடனைத் திருப்பித் தருவதாக வழங்கப்பட்ட காசோலை, இந்திய ஒப்பந்தச் | சென்னை உயர்நீதிமன்றம் | A.S. No. 16 of 2022 and C.M.P. No. 585 of 2022 | 52 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | சட்டம் சட்டப்பிரிவு 25(3)-இன் கீழ் நிறைவேற்றத்தக்க வாக்குறுதியாகுமா; காசோலை வங்கியில் சமர்ப்பிக்கப்படாத நிலையில், மாற்றுமுறை ஆவணச் சட்டம் சட்டப்பிரிவு 64-ஐ காரணம் காட்டி காசோலை எழுதிக் கொடுத்தவர் தம் பொறுப்பிலிருந்து விலக முடியுமா? | | | |
| 12 | கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்ட நிலையில், அந்த ரத்து சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் கோராமல் ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு நிலைக்குமா; ஒப்பந்த காலக்கெடு முடிந்த பின்னர் கடன் பெற்று, ஆறு ஆண்டுகள் கழித்து மீதி தொகையை செலுத்தியது வாதியின் தயார்நிலையை நிரூபிக்குமா? | மதுரை, சென்னை உயர்நீதிமன்றம் | A.S.(MD) No. 234 of 2015 and M.P.(MD) No. 1 of 2015 | 57 |
| 13 | பதிவு செய்யப்படாமலும் முத்திரைத்தாள் இல்லாமலும் உள்ள ஆவணம் ஒன்றை ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கில் சான்றாக ஏற்க | உச்சநீதிமன்றம் | Civil Appeal No. 6543 of 2025 (Arising out of SLP (C) No. 10893 of 2021) | 62 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | முடியுமா; வாய்மொழி கிரைய ஒப்பந்தத்திற்கான சான்றாக அதனை ஏற்க பதிவுச் சட்டம், 1908 சட்டப்பிரிவு 49-இன் விதிவிலக்கு வழிவகுக்கிறதா? | | | |
| 14 | கிரைய ஒப்பந்தத்தில் குறிக்கப்-பட்ட காலவரம்பு முடிந்த பின்னரும் நீண்ட காலம் நடவடிக்கை எடுக்காமல் இருந்த வாங்குபவர் ஏற்றதை ஆற்றக் கோரும் பரிகாரம் பெற முடியுமா; உண்மையான கிரைய ஒப்பந்தத்தை மறைத்து வழக்கு தொடுத்தமை அப்-பரிகாரத்தைத் தடுக்குமா? | சென்னை உயர்நீதிமன்றம் | A.S. No. 68 of 2015 and C.M.P. No. 7734 of 2017 | 66 |
| 15 | வழக்கு விசாரணையிலோ மேல்முறையீட்டிலோ எழுப்பப்படாத சொத்து அளவு தொடர்பான வாதத்-தை நிறைவேற்று நடவடிக்-கையில் புதிதாக எழுப்ப முடியுமா; பிரிக்கப்-படாத 2/3 பங்கு மட்டுமே கிரையம் செய்யப்பட்ட நிலையில் தீர்ப்பாணை பெற்றவர்கள் நேரடி அனுபவ உரிமை கோர முடியுமா? | சென்னை உயர்நீதிமன்றம் | CRP Nos. 2457 and 2459 of 2026 and CMP Nos. 10477 and 10481 of 2026 | 71 |

## #1#

**கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலம் முடிந்த பிறகும், விற்பனையாளர் கூடுதல் முன்பணம் பெற்று காலத்தை நீட்டித்திருந்தால், பின்னர் "காலம்தான் ஒப்பந்தத்தின் சாரம்" என்றும், வாங்குபவர் தயாராக இல்லை என்றும் கூறி ஏற்றதை ஆற்ற மறுக்க முடியுமா?**




இவ்வழக்கில், தி.மெய்யப்பன் மற்றும் வேணுகோபால் ஆகியோர் தங்களுக்குச் சொந்தமான நிலத்தை, சி.செல்வனுக்கு 14.09.2015 அன்று ஏக்கருக்கு ரூ.6,00,000/- என்ற விலையில் மொத்தம் ரூ.58,08,000/-க்கு விற்க ஒப்புக்கொண்டு கிரைய ஒப்பந்தம் செய்தனர். அன்றே ரூ.20,00,000/- முன்பணமாக பெற்றுக்கொள்ளப்பட்டது. ஒப்பந்தத்தின் படி, மூன்று மாதங்களுக்குள் மீதமுள்ள தொகையான ரூ.38,08,000/- செலுத்தப்பட்டு கிரைய பத்திரம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், அதற்கு முன் விற்பனையாளர்கள் நிலத்தை அளந்து எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும்

என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. வாங்குபவர் ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தவறினால் முன்பணம் பறிமுதல் செய்யலாம் என்றும், விற்பனையாளர்கள் ஏற்றதை ஆற்ற மறுத்தால் வாங்குபவருக்கு ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு தொடரும் உரிமை உண்டு என்றும் ஒப்பந்தத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், மூன்று மாத காலம் முடிந்த பின்னரும் விற்பனையாளர்களே 18.12.2015 அன்று மேலும் ரூ.10,00,000/- முன்பணம் பெற்றுக்கொண்டு, ஒப்பந்தத்தை 2016 ஜனவரி இறுதி வரை நீட்டித்தனர். இருந்தபோதிலும் நிலத்தை அளந்து எல்லைகளை நிர்ணயிக்கவில்லை. வாங்குபவர் தொடர்ந்து கிரைய பத்திரத்தை நிறைவேற்றுமாறு கேட்டும், விற்பனையாளர்கள் ஒத்துழைக்காததால் 11.04.2016 அன்று அறிவிப்பு அனுப்பி, சத்தியமங்கலம் சார்பு பதிவாளர் அலுவலகத்தில் வந்து மீதமுள்ள ரூ.28,08,000/- பெற்றுக்கொண்டு கிரைய பத்திரத்தை நிறைவேற்றுமாறு அழைத்தார். அதற்கு விற்பனையாளர்கள் பதிலறிவிப்பில், வாங்குபவர் தயாராக இல்லை, அவரிடம் போதிய நிதி இல்லை, காலமே ஒப்பந்தத்தின் சாரம் என்பதால் முன்பணம் பறிமுதல் செய்யப்படும் என்று மறுத்தனர். இதையடுத்து வாங்குபவர் ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கைத் தொடர்ந்தார்.

விசாரணை நீதிமன்றத்தில், விற்பனையாளர் தரப்பினர் ஒப்பந்தம் மற்றும் முன்பணம் பெற்றதை ஆரம்பத்தில் மறுத்தாலும், சாட்சியத்தில் அதனை ஒப்புக்கொண்டனர். இரண்டு ஒப்பந்தங்களும் உண்மையானவை என்றும், மொத்தம் ரூ.30,00,000/- முன்பணம் பெற்றிருந்ததும் உறுதியானது. வாங்குபவர் தனது வங்கி கணக்கு விவரத்தை தாக்கல் செய்து, ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தேவையான தொகை தன்னிடம் இருந்ததை நிரூபித்தார். அதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணை நீதிமன்றம் ஏற்றதை ஆற்ற உத்தரவிட்டது. இதனை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டது.

மேல்முறையீட்டில் விற்பனையாளர்கள் தரப்பில், இரண்டு கிரைய ஒப்பந்தங்களும் பதிவு செய்யப்படாதவை என்பதால் அவற்றை ஆதாரமாக ஏற்க முடியாது என்றும், வாங்குபவர்

ஒப்பந்தக் காலத்திற்குள் மீதத் தொகையை செலுத்தத் தயாராக இல்லை என்றும், வங்கி கணக்கில் தேவையான இருப்பு காலாவதியான நாளில் இல்லை என்றும், ஆகவே அவர் தொடர்ச்சியான தயார்நிலை மற்றும் விருப்பத்தை (readiness and willingness) நிரூபிக்கத் தவறிவிட்டார் என்றும் வாதிடப்பட்டது. மேலும் **Kamal Kumar v. Premlata Joshi** ((2019) 3 SCC 704), **Padmakumari v. Dasayyan** ((2015) 8 SCC 695), **R. Gnana Arulmoni v. R.S. Maharajan** (2019 (3) CTC 564) மற்றும் **Alagammal v. Ganesan** ((2024) 3 SCC 232) ஆகிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, ஏற்றதை ஆற்றக் கோரும் வழக்கில் தயார்நிலை, விருப்பம் மற்றும் காலத்தின் முக்கி-யத்துவம் கட்டாயமாக நிரூபிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

வாங்குபவர் தரப்பில், ஒப்பந்தத்தின் மூன்று மாத காலம் முடிந்த பிறகே விற்பனையாளர்களே கூடுதல் ரூ.10,00,000/- முன்பணம் பெற்றுக்கொண்டு காலத்தை நீட்டித்திருப்பதால், "காலம்தான் ஒப்பந்தத்தின் சாரம்" என்று பின்னர் வாதிட முடியாது என்றும், நிலத்தை அளந்து எல்லைகளை நிர்ணயிப்பது விற்பனையாளர்களின் கடமையாக இருந்தும் அவர்கள் அதைச் செய்யவில்லை என்றும், தன்னுடைய வங்கி கணக்கில் போதிய தொகை இருந்ததையும், அறிவிப்பு அனுப்பி கிரைய பத்திரம் நிறைவேற்ற அழைத்ததையும், பின்னர் வழக்கு நிலுவையில் இருந்தபோதே மீதமுள்ள விற்பனைத் தொகையையே நீதிமன்றத்தில் செலுத்தியிருப்பதையும் சுட்டிக்காட்டி, தாம் தொடர்ந்து தயாராகவும் விருப்பத்துடனும் இருந்ததை நிரூபித்திருப்பதாக வாதிட்டார்.

உயர்நீதிமன்றம் ஆவணங்களையும் சாட்சியங்களையும் ஆய்வு செய்து, விற்பனையாளர்கள் முதலில் ஒப்பந்தத்தையே மறுத்திருந்தாலும் பின்னர் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டிருப்பது, முன்பணம் பெற்றிருப்பது மற்றும் இரண்டாவது ஒப்பந்தத்தில் காலத்தை நீட்டித்திருப்பது ஆகியவை ஒப்பந்தத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதாகக் கண்டது. மூன்று மாத காலம் முடிந்த பின்னரும் கூடுதல் முன்பணம் பெற்று காலத்தை

நீட்டித்திருப்பதால், காலமே ஒப்பந்தத்தின் சாரம் என்ற வாதம் பலவீனமடைகிறது என்று நீதிமன்றம் கூறியது. மேலும், நிலத்தை அளந்து எல்லைகளை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பை விற்பனையாளர்கள் நிறைவேற்றாத நிலையில், காலத்தை வாங்குபவருக்கு எதிராக பயன்படுத்த முடியாது என்றும் தெரிவித்தது.

வாங்குபவரின் தயார்நிலை மற்றும் விருப்பம் குறித்த கேள்வியில், வங்கி கணக்கு விவரங்களில் ஒப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய காலத்தில் ரூ.40,00,000/- மற்றும் பின்னரும் ரூ.33,00,000/- இருப்பு இருந்தது தெரியவந்தது. அதே சமயம் அவர் அறிவிப்பு அனுப்பி விற்பனையாளர்களை சார்பு பதிவாளர் அலுவலகத்திற்கு வருமாறு அழைத்ததும், அவர்கள் மறுத்தவுடன் காலக்கெடுவுக்குள் வழக்கு தொடர்ந்ததும், பதிலுரை தாக்கல் செய்யப்படுவதற்கும் முன்பே மீதமுள்ள ரூ.28,08,000/- தொகையை நீதிமன்றத்தில் வைப்பு செய்திருந்ததும், அவரது தொடர்ச்சியான தயார்நிலையை உறுதிப்படுத்துவதாக நீதிமன்றம் கண்டறிந்தது. எனவே Kamal Kumar v. Premlata Joshi தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்ற-தை ஆற்றக் கோரும் வழக்கிற்கான அனைத்து நிபந்தனைகளையும் வாங்-குபவர் பூர்த்தி செய்துள்ளார் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தங்களை ஆதாரமாக பயன்படுத்த முடியாது என்ற வாதத்தையும் நீதிமன்றம் ஏற்கவில்லை. **பதிவு சட்டம், சட்டப்பிரிவு 49-ன் வரையறை (proviso)** படி, பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் உரிமையை நேரடியாக மாற்றும் ஆவணமாக ஏற்கப்படாவிட்டாலும், ஒப்பந்தத்தின் இருப்பை நிரூபித்து ஏற்றதை ஆற்றக் கோரும் வழக்கில் ஒப்பந்த ஆவணமாக பயன்படுத்த முடியும் என்று தெளிவுபடுத்தியது. எனவே பதிவு இல்லாததையே காரணமாகக் கொண்டு ஒப்பந்தத்தை நிராகரிக்க முடியாது என்றும் தீர்மானித்தது.

இதனைத் தொடர்ந்து, விசாரணை நீதிமன்றம் வழங்கிய ஏற்றதை ஆற்றும் உத்தரவு சட்டப்படி சரியானது என்றும், வாங்குபவர் எப்போதும் தயாராகவும் விருப்பத்துடனும் இருந்-

தது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், விற்பனையாளர்களே ஒப்பந்தத்தை மீறியுள்ளனர் என்றும் கூறி மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதிப்படுத்தியது.

**இந்த தீர்ப்பின் மூலம், கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலம் முடிந்த பின்னரும் விற்பனையாளர் கூடுதல் முன்பணம் பெற்று காலத்தை நீட்டித்திருந்தால், பின்னர் "காலம்தான் ஒப்பந்தத்தின் சாரம்" என்று வாதிட முடியாது; வாங்குபவர் அறிவிப்பு அனுப்பி, போதிய நிதி இருப்பை நிரூபித்து, மீதமுள்ள தொகையை நீதிமன்றத்தில் வைப்பு செய்திருப்பது அவரது தொடர்ச்சியான தயார்நிலை மற்றும் விருப்பத்தை நிரூபிக்கும்; மேலும் பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தமும் பதிவு சட்டம் சட்டப்பிரிவு 49-ன் வரையறையின்படி ஏற்றதை ஆற்றக் கோரும் வழக்கில் ஒப்பந்த ஆவணமாக பயன்படுத்தப்படலாம் என்ற முக்கியமான சட்டக் கொள்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

A.S. No. 924 of 2018

T. Meyyappan & Another v. C. Selvan

Coram: Justice C.V. Karthikeyan & Justice K. Rajasekar

Date: 02.04.2026

Citation: 2026:MHC:1334

--------------------------------

## #2#

***ஒரே சொத்திற்காக தொடர்ந்து பல விற்பனை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பதும், வாதி உண்மைகளை மறைத்து நீதிமன்றத்தை அணுகியிருப்பதும் நிரூபிக்கப்பட்டால், ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கில் அந்த பரிகாரத்தை வழங்க முடியுமா? அவ்வாறு மறுக்கப்படும் நிலையில், மாற்றுப் பரிகாரமாக முன்பணத்தை திருப்பித் தர நீதிமன்றம் உத்தரவிட முடியுமா?***




இந்த வழக்கில், தர்மபுரி மாவட்டம், புதுப்பட்டி கிராமத்தில் அமைந்திருந்த 76 சென்ட் நிலத்தை முதல் பிரதிவாதி, சென்டுக்கு ரூ.1,60,000/- என்ற விலையில் மொத்தம் ரூ.1,23,20,000/-க்கு வாதிக்கு விற்க ஒப்புக்கொண்டதாக கூறப்பட்டது. முதல் விற்பனை ஒப்பந்தத்தின் போது ரூ.11,50,000/- முன்பணம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 18.04.2020 அன்று ரூ.10,00,000/-, 05.05.2020 அன்று ரூ.3,50,000/-, 10.08.2020 அன்று ரூ.21,00,000/- மற்றும் 07.10.2020 அன்று ரூ.4,00,000/- வழங்கப்பட்டு

மொத்தம் ரூ.50,00,000/- முன்பண-மாக செலுத்தப்பட்டதாக வாதி கூறி-னார். இந்த இடைவெளியில் 19.02.2020, 10.08.2020, 17.02.2021 மற்றும் 14.08.2021 ஆகிய தேதிகளில் மொத்தம் நான்கு ஒப்பந்தங்கள் செய்-யப்பட்டன. பின்னர் நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்காக 37 சென்ட் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டதால், மீதமிருந்த 31¼ சென்ட் நிலத்தை மட்டுமே வாங்கிக் கொள்ளத் தயாராக இருப்பதாக வாதி தெரிவித்தார். 15.09.2022 அன்று பிரதிவாதி, அரசின் ஆட்சேபணை இல்லா சான்றிதழ் கிடைத்தவுடன் விற்பனைப் பத்திரத்-தை பதிவு செய்து தருவதாக எழுத்துப்பூர்வ உறுதிமொழி வழங்கி-யதாகவும், அதன்பிறகும் விற்பனைப் பத்திரம் நிறைவேற்றப்படாததால் 24.12.2022 அன்று அறிவிப்பு அனுப்பி, பின்னர் ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கைத் தொடர்ந்ததாகவும் கூறினார்.

பிரதிவாதிகள் தரப்பில், இந்த ஆவணங்கள் உண்மையான விற்பனை ஒப்பந்தங்கள் அல்ல என்றும், தங்களது மகன்களின் மருத்துவக் கல்லூரி கட்டணத்தை செலுத்துவதற்காக வாதியின் கணவரிடமிருந்து கடன் பெற்றபோது பாதுகாப்பிற்காக வெற்-று முத்திரைத்தாள்களில் கையெழுத்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும், பின்னர் அவை விற்பனை ஒப்பந்-தங்களாக உருவாக்கப்பட்டதாகவும் வாதிட்டனர். மேலும், கடன் தொகைகள் திருப்பிச் செலுத்தப்பட்-டபின் முதல் மூன்று அசல் ஒப்பந்-தங்களும் தங்களிடம் ஒப்படைக்கப்-பட்டதாகவும், அதனால்தான் அந்த அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடிந்ததாகவும் தெரி-வித்தனர். ஒரே சொத்திற்காக நான்கு தனித்தனி விற்பனை ஒப்பந்தங்கள் செய்வது இயல்பான வர்த்தக நடை-முறை அல்ல என்றும், வாதி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியாற்றியதால் ஒப்பந்தங்கள் கை-யெழுத்தான நாட்களில் சம்பவ இடத்தில் இருந்திருக்க முடியாது என்றும், எனவே ஏற்றதை ஆற்றும் பரிகாரம் வழங்க முடியாது என்றும் வாதிட்டனர்.

விசாரணை நீதிமன்றம் வாதியின் தரப்பை ஏற்று ஏற்றதை ஆற்ற உத்த-

ரவிட்டது. அதனை எதிர்த்து பிரதிவாதிகள் மேல்முறையீடு செய்தனர்.

மேல்முறையீட்டு நீதிமன்றம் முதலில், ஒரே சொத்திற்காக தொடர்ந்து நான்கு விற்பனை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பது இயல்பான ஒப்பந்த நடைமுறைக்கு முரணானது என்று குறிப்பிட்டது. உண்மையில் விற்பனை நோக்கம் இருந்திருந்தால், முதல் ஒப்பந்தத்திலேயே தேவையான திருத்தங்களோ அல்லது கால நீட்டிப்பு குறிப்புகளோ செய்யப்பட வேண்டுமே தவிர, ஒவ்வொரு முறையும் புதிய ஒப்பந்தம் செய்வதற்கான அவசியம் இல்லை என்று நீதிமன்றம் கூறியது. மேலும், முதல் இரண்டு ஒப்பந்தங்களிலும் அனைத்து பிரதிவாதிகளும் கையெழுத்திடாத நிலையிலும், வாதி மிகப்பெரிய தொகையை முன்பணமாக வழங்கியதாகக் கூறியது இயல்பற்றதாக இருப்பதாகக் கண்டது. இதனுடன், 76 சென்ட் நிலத்திற்காக செய்யப்பட்ட ஒப்பந்தத்தை பின்னர் 31¼ சென்ட் நிலத்திற்கு மட்டும் அமல்படுத்தக் கோரியிருந்தாலும், **குறித்தவகை பரிகார சட்டம்** சட்டப்பிரிவு 12-ன் கீழ் பகுதி ஒப்பந்தத்தை அமல்படுத்த தேவையான நிபந்தனை-கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்-றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

வாதி, முதல் மூன்று அசல் ஒப்பந்தங்களையும் பிரதிவாதிகள் கிழித்தெறிந்ததாக தொடர்ந்து கூறியிருந்தார். ஆனால் அந்த மூன்று அசல் ஒப்பந்தங்களையும் பிரதிவாதிகளே நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். இதனால், வாதி முன்வைத்த முக்கியமான உண்மை முற்றிலும் பொய்யானது என்பது நிரூபிக்கப்பட்டது. இந்த பொய்யான நிலைப்பாடு வழக்கு முழுவதும் தொடரப்பட்டதாகவும், வாதி நீதிமன்றத்தை தூய்மையான கைகளுடன் அணுகவில்லை என்றும் நீதிமன்றம் கண்டறிந்தது. மேலும், அசல் ஆவணங்கள் பிரதிவாதிகளிடமே இருந்தது, அவை கடன் பரிவர்த்தனைக்கான பாதுகாப்பு ஆவணங்களாக இருந்திருக்கலாம் என்ற அவர்களது வாதத்தை வலுப்படுத்துவதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

தயார்நிலை மற்றும் விருப்பம் குறித்தும் நீதிமன்றம் விரிவாக ஆராய்ந்தது. வாதி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணியாற்றியவர் என்பதும்,

ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாகக் கூறப்பட்ட நாட்களிலும், முன்பணம் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட நாட்க-ளிலும் அவர் மருத்துவமனையில் பணியில் இருந்தது, அவருடைய சொந்த சாட்சியத்தாலும், மருத்துவம-னையின் செவிலியர் மேற்பார்வை-யாளர் அளித்த சாட்சியத்தாலும் உறுதி செய்யப்பட்டது. குறிப்பாக COVID-19 காலத்தில் தனிமைப்படுத்தல் பிரிவி-லும், ICU-விலும் பணியாற்றியிருந்த பதிவுகள் தாக்கல் செய்யப்பட்டன. மேலும், ஒப்பந்தங்கள் கையெழுத்தா-ன நேரம் பற்றிய விவரங்களைக்கூட வாதியால் கூற முடியவில்லை. இத-னால், பணம் வழங்கியதாகவும், ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் கூறிய நிகழ்வுகள் மீது நீதிமன்றத்திற்கு கடு-மையான சந்தேகம் ஏற்பட்டது. மேலும், 14.08.2021 அன்று இறுதி ஒப்பந்தம் செய்யப்பட்டதாகக் கூறப்-பட்டிருந்தபோதும், சட்ட அறிவிப்பு 24.12.2022 அன்று மட்டுமே அனுப்பப்பட்டு, வழக்கும் 2023ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த தாமதமும், தொடர்ச்சியான தயார்நிலை மற்றும் விருப்பம் இல்லா-ததற்கான முக்கியமான சூழ்நிலையாக நீதிமன்றம் கருதியது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர், **M. Jayaprakash Narayanan v. Santham-mal** (2018 (1) CTC 701) தீர்ப்பை மேற்கோள் காட்டி, வெறும் கையெழுத்து இருப்பதால் மட்டும் செல்லுபடியாகும் ஒப்பந்தம் உருவா-காது; தரப்பினரிடையே உண்மை-யான ஒப்புதல் (consensus ad idem) மற்றும் சட்டபூர்வமான பரிமாற்ற நோக்கம் நிரூபிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டார். வாதி தரப்பு வழக்கறிஞர், **Syed Dastagir v. T.R. Go-palakrishna Setty** ((1996) 6 SCC 337) தீர்ப்பில் கூறப்பட்டபடி, தயார்நிலை மற்றும் விருப்பம் என்பது ஒரு குறிப்பிட்ட செயலில் மட்டுமல்ல, தரப்பினரின் முழு நடத்தையிலிருந்தே மதிப்பிடப்பட வேண்டும் என்றும், **Krishi Utpadan Mandi Samiti Sahas-wan v. Bipin Kumar** (AIR 2004 SC 2895) தீர்ப்பின்படி, ஒரு எழுத்துப்பூர்வ ஆவணம் உண்மையில் வேறு நோக்கத்திற்காக உருவாக்கப்-பட்டது என்பதை நிரூபிக்க வாய்மொ-ழிச்

சாட்சியமும் ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றும் வாதிட்டார். இந்தக் கொள்கைகளைப் பொருத்திப் பார்த்த நீதிமன்றம், ஆவணங்கள் உண்மையான விற்பனை ஒப்பந்தங்கள் அல்ல; கடன் பரிவர்த்தனைகளின் பாதுகாப்பு ஆவணங்களாக இருக்கக்கூடும் என்ற பிரதிவாதிகளின் நிலைப்பாடு சாத்தியமானது என்று முடிவு செய்தது.

அதேநேரத்தில், ரூ.50,00,000/- பெற்றது பிரதிவாதிகளால் மறுக்கப்படவில்லை. ஆனால், அந்தத் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டதாக எந்த ஆதாரமும் தாக்கல் செய்யப்படவில்லை. இதனால், ஏற்றதை ஆற்றும் பரிகாரம் வழங்க முடியாத நிலையில் கூட, முழுமையான நீதி வழங்கும் நோக்கில் மாற்றுப் பரிகாரம் வழங்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று கூறியது. இந்த நிலைப்பாட்டிற்கு நீதிமன்றம் நேரடியாக, **N. Sekaran v. C. Rajendran** (AIR 2018 Mad 67) என்ற Coordinate Bench தீர்ப்பை மேற்கோள் காட்டியது; வாதி மாற்றுப் பரிகாரம் கோரவில்லை என்ற காரணத்தால் நீதிமன்றத்தின் அதிகாரம் குறையாது, முழுமையான நீதி வழங்கும் நோக்கில் நீதிமன்றம் தகுந்த பரிகாரத்தை வடிவமைக்க முடியும் என அந்தத் தீர்ப்பு உறுதிப்படுத்தியது. அதன் அடிப்படையில், ரூ.50,00,000/- தொகையை ஒவ்வொரு தொகையும் செலுத்தப்பட்ட நாளிலிருந்து ஆண்டுக்கு 6% எளிய வட்டியுடன் திருப்பிச் செலுத்த பிரதிவாதிகளுக்கு
உத்தரவிடப்பட்டது. மேலும், அந்தத் தொகையைப் பாதுகாக்க வழக்குச் சொத்தின் மீது பிணை உரிமையும் உருவாக்கப்பட்டது. இதனால், விசாரணை நீதிமன்றம் வழங்கிய ஏற்றதை ஆற்றும் தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு, மாற்றுப் பரிகாரம் மட்டும் வழங்கப்பட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், ஏற்றதை ஆற்றும் பரிகாரம் கோரும் தரப்பினர் நீதிமன்றத்தை தூய்மையான கைகளுடன் அணுக வேண்டும்; ஒரே சொத்திற்காக தொடர்ச்சியாக பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பதும், உண்மைகளை மறைத்து பொய்யான நிலைப்பாடு எடுக்கப்பட்டிருப்பதும், தொடர்ச்சியான தயார்நிலை மற்றும் விருப்பம் நிரூபிக்கப்படாததும் ஏற்ற-**

தை ஆற்றும் பரிகாரத்தை மறுக்க போதுமான காரணங்களாகும். அதே-வேளையில், முன்பணம் பெற்றிருப்-பது நிரூபிக்கப்பட்டு, அது திருப்பிச் செலுத்தப்பட்டதாக ஆதாரம் இல்லா-தபட்சத்தில், வாதி மாற்றுப் பரிகாரம் கோரவில்லை என்றாலும், முழுமை-யான நீதி வழங்கும் நோக்கில் முன்ப-ணத்தை வட்டியுடன் திருப்பித் தர நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

A.S. No. 30 of 2026

K. Venkatachalam & Others v. K. Revathi

Coram: Justice N. Sathish Kumar & Justice R. Sakthivel

Date: 27.02.2026

Citation: 2026 (3) CTC 715

---

## #3#

**நீதிமன்றத்தின் முன் மத்தியஸ்தத்தின் மூலம் எட்டப்பட்ட சமரச ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதன் பலன்களைப் பெற்ற பிறகு, ஒரு தரப்பினர் ஒருதலைப்பட்சமாக அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகி குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் புதிய வழக்கைத் தொடர முடியுமா? மேலும், அத்தகைய சூழ்நிலையில் உச்சநீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டம் சரத்து 142-ன் அதிகாரத்தை பயன்படுத்தி திருமணத்தை கலைக்க முடியுமா?**




தனஞ்சய் ராத்தி மற்றும் ருசிகா ராத்தி ஆகியோரின் திருமணம் 19.02.2000 அன்று இந்து மரபுப்படி நடைபெற்றது. இவர்களுக்கு ஒரு மகளும் ஒரு மகனும் பிறந்தனர். பின்னர் கருத்து வேறுபாடுகள் காரணமாக 2022–23 முதல் இருவரும் தனித்தனியாக வாழத் தொடங்கினர். இதையடுத்து கணவர், மனைவி மீது கொடுமை மற்றும் ஒழுக்கக்கேடு குற்றச்சாட்டுகளை முன்வைத்து இந்து திருமணச் சட்டத்தின் கீழ் விவாகரத்து வழக்கு தொடர்ந்தார்.

குடும்ப நீதிமன்றம் வழக்கை மத்தியஸ்தத்திற்கு அனுப்பிய நிலையில், 16.05.2024 அன்று இருவருக்கும் இடையே விரிவான சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி, இருவரும் பரஸ்பர சம்மத விவாகரத்துக்கு ஒப்புக்கொண்டதுடன், கணவர் ரூ.1.50 கோடி முழுமையான இறுதித் தீர்வுத் தொகையாக வழங்கவும், ரூ.14 லட்சம் கார் வாங்குவதற்காக வழங்கவும், மனைவியின் நகைகளை திருப்பிக் கொடுக்கவும் ஒப்புக்கொண்டார். மறுபுறம், மனைவி ரூ.2.52 கோடிக்கும் மேற்பட்ட தொகை தொடர்பான Gift Deed வழங்கவும், தனது பெயரில் இருந்த சொத்துகள், பங்குகள், காப்பீட்டு பாலிசிகள் ஆகியவற்றை மாற்றித் தரவும், இனிமேல் இரு தரப்பினரும் ஒருவருக்கு எதிராக ஒருவர் அல்லது குடும்பத்தினருக்கு எதிராக எந்த உரிமையியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையும் தொடுக்க மாட்டோம் என்றும் உறுதியளித்தனர். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் முதல் கட்ட பரஸ்பர சம்மத மனு ஏற்கப்பட்டு, கணவர் ரூ.75 லட்சம், கார் தொகை, நகைகள் ஆகியவற்றை வழங்கினார்; மனைவியும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றி, பெரும் தொகையை கணவருக்கு மாற்றினார்.

ஆனால் இரண்டாவது கட்ட விவாகரத்து மனுவில் கையெழுத்திட வேண்டிய நேரத்தில், மனைவி தனது சம்மதத்தை வாபஸ் பெற்றார். பின்னர் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் கணவர் மற்றும் அவரது தாயாருக்கு எதிராக புதிய வழக்கு தொடர்ந்தார். இதற்கு எதிராக கணவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம், மனைவி பெற்றிருந்த ரூ.89 லட்சத்தை நீதிமன்றத்தில் வைப்பு செய்ய உத்தரவிட்டதுடன், குடும்ப வன்முறை வழக்கை தொடர அனுமதித்தது. இதை எதிர்த்து கணவர் உச்சநீதிமன்றத்தை அணுகியதோடு, அரசியலமைப்புச் சட்டம் சரத்து 142-ன் கீழ் திருமணத்தை கலைக்கவும் கோரினார்.

கணவர் தரப்பில், மத்தியஸ்தத்தின் மூலம் ஏற்பட்ட சமரச ஒப்பந்தத்தை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்ட பின்-

னர், அதன் பலன்களைப் பெற்றுக்கொண்டு பின்னர் அதிலிருந்து விலகுவது நீதிமன்ற நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதாகும் என்று வாதிடப்பட்டது. மனைவி ரூ.89 லட்சம், நகைகள் மற்றும் பிற நன்மைகளை பெற்றுக்கொண்ட பிறகே குடும்ப வன்முறை வழக்கை தொடங்கியிருப்பது கூடுதல் பணத்தைப் பெறும் நோக்கத்திலான செயல் என்றும் கூறப்பட்டது. **Ruchi Agarwal v. Amit Kumar Agarwal (2005) 3 SCC 299, Mohd. Shamim v. Nhahid Begum (2005) 3 SCC 302, Trisha Singh v. Anurag Kumar (2024 SCC OnLine SC 1191)** போன்ற தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, நீதிமன்றம் முழுமையான நீதியை வழங்க சரத்து 142 அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மனைவி தரப்பில், சமரச ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத சுமார் ரூ.120 கோடி மதிப்பிலான நகைகள் மற்றும் ரூ.50 கோடி மதிப்பிலான தங்கக் கட்டிகளை கணவர் திருப்பித் தருவதாக வாய்மொழி உறுதியளித்ததாகவும், அதனை நம்பியே ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாகவும் கூறப்பட்டது. அவற்றை வழங்காததால் இரண்டாவது கட்ட விவாகரத்து மனுவில் கையெழுத்திட மறுத்ததாகவும், **Sureshta Devi v. Om Prakash (1991) 2 SCC 25** தீர்ப்பின்படி பரஸ்பர சம்மதம் இறுதி விவாகரத்து உத்தரவு வழங்கப்படும் வரை தொடர வேண்டும் என்பதால் தனது சம்மதத்தை திரும்பப் பெற சட்ட உரிமை இருப்பதாகவும் வாதிட்டார். மேலும், தனது ஸ்த்ரீதனம் மற்றும் நகைகள் திருப்பித் தரப்படாதது குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் தொடர்ச்சியான பொருளாதார வன்முறையாகும் என்றும் கூறினார்.

இந்த வாதங்களை ஆய்வு செய்த உச்சநீதிமன்றம், **Ruchi Agarwal v. Amit Kumar Agarwal** தீர்ப்பில் ஏற்கனவே, சமரசத்தின் பலன்களைப் பெற்றுக்கொண்டு பின்னர் குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்வது நீதிமன்ற நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதாக தீர்மானிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியது. அதேபோல் **Anurag Vijaykumar Goel v. State of Maharashtra (2025 SCC OnLine SC 1611)** வழக்கிலும், முதல்

கட்ட பரஸ்பர சம்மத விவாகரத்து நடைமுறையை நிறைவு செய்த பின்னர் மனைவி சமரசத்திலிருந்து விலகிய சூழலில், சரத்து 142 அதிகாரத்தைப் பயன்படுத்தி திரும-ணத்தை கலைத்து அனைத்து வழக்கு-களும் ரத்து செய்யப்பட்டதை நினை-வுபடுத்தியது. இவ்விரு தீர்ப்புகளும் இவ்வழக்கின் உண்மை நிலைக்கு மிகவும் பொருந்துவதாக நீதிமன்றம் கூறியது.

**Sureshta Devi** தீர்ப்பில் கூறப்-பட்டபடி பரஸ்பர சம்மதத்தை இறுதி கட்டத்திற்கு முன் திரும்பப் பெறும் உரிமை இருப்பது உண்மைதான் என்றாலும், அது சாதாரண பரஸ்பர ஒப்பந்தங்களுக்கு பொருந்தும். ஆனால் இவ்வழக்கில் சமரசம் நீதிமன்ற உத்தர-வின் பேரில் மத்தியஸ்த மையத்தில் எட்டப்பட்டு, அதன் அடிப்படையில் இரு தரப்பினரும் ஒப்பந்தத்தின் பெரும்பகுதியை ஏற்கனவே நிறை-வேற்றியிருந்தனர். இத்தகைய சூழலில், பலன்களைப் பெற்றுக்கொண்ட பிறகு ஒருதலைப்பட்சமாக விலகுவதை சட்-டம் ஊக்குவிக்க முடியாது என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

குடும்ப வன்முறை வழக்கை ஆய்வு செய்த நீதிமன்றம், அதில் குடும்ப வன்முறையை நிரூபிக்கும் எந்தவொரு குறிப்பிட்ட சம்பவமும் கூறப்பட-வில்லை என்று கண்டறிந்தது. மனை-வி பல ஆண்டுகளாக கணவரிடமிருந்-து தனியே வாழ்ந்து வந்த நிலையில், சமரச ஒப்பந்தத்திலிருந்து விலகிய பின்னரே இந்த வழக்கு தொடுக்கப்பட்-டிருப்பது கவனிக்கப்பட்டது. மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பெரும்பாலும் ரூ.120 கோடி மதிப்பிலான நகைகள் மற்றும் ரூ.50 கோடி மதிப்பிலான தங்கக் கட்டிகள் வழங்கப்படவில்லை என்ற குற்றச்-சாட்டை மையமாகக் கொண்டவை மட்டுமே; அவை குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்-கையை தொடர போதுமானவை அல்ல என்று நீதிமன்றம் தீர்மானித்-தது. எனவே, இந்த வழக்கு நீதிமன்ற நடைமுறையை தவறாகப் பயன்படுத்-தும் முயற்சியாக இருப்பதால் அதை ரத்து செய்ய வேண்டும் என்று கூறியது.

அதனைத் தொடர்ந்து, அரசியலமைப்-புச் சட்டம் சரத்து 142 தொடர்பாக

நீதிமன்றம் விரிவாக ஆராய்ந்தது. கடந்த சில ஆண்டுகளாக இருவரும் தனித்தனியாக வாழ்ந்து வந்ததையும், பல்வேறு நீதிமன்ற வழக்குகள் மூலம் உறவு முற்றிலும் சீரழிந்திருப்பதையும், மீண்டும் இணைந்து வாழும் வாய்ப்பு எதுவும் இல்லாததையும் கருத்தில் கொண்டு, திருமணம் முற்றிலும் மீள முடியாத அளவுக்கு சிதைந்துவிட்டது (irretrievable breakdown of marriage) என்று நீதிமன்றம் கண்டறிந்தது. எனவே முழுமையான நீதியை வழங்கும் நோக்கில் சரத்து 142 அதிகாரத்தைப் பயன்படுத்தி திரும-ணத்தை கலைத்தது. அதே நேரத்தில், சமரச ஒப்பந்தத்தின் மீதமுள்ள நிபந்தனைகளும் உரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும், கணவர் மீதமுள்ள சமரசத் தொகை-யை செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இதன் விளைவாக குடும்ப வன்முறை வழக்கும் ரத்து செய்யப்பட்டது.

***இந்த தீர்ப்பின் மூலம், நீதிமன்றத்தின் முன் மத்தியஸ்தத்தின் மூலம் எட்டப்-பட்டு, அதன் அடிப்படையில் தரப்பி-னர் ஏற்கனவே பலன்களைப் பெற்-றுள்ள சமரச ஒப்பந்தத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக விலகி புதிய குற்றவியல் அல்லது குடும்ப வன்முறை நடவடிக்கைகளைத் தொடங்குவது நீதிமன்ற நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதாகும்; திருமணம் முற்றிலும் மீள முடியாத அளவுக்கு சிதைந்திருப்பது உறுதியாகும் போது, உச்சநீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டம் சரத்து 142-ன் அதிகாரத்தைப் பயன்படுத்தி திருமணத்தை கலைத்து, முழுமையான நீதியை வழங்க முடியும் என்ற முக்கியமான சட்டக் கொள்-கையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்-தியுள்ளது.***

---

IN THE SUPREME COURT OF INDIA

Criminal Appeal No. 1924 of 2026 (Arising out of SLP (Crl.) No. 1878 of 2026)

Dhananjay Rathi v. Ruchika Rathi

Coram: Justice Vijay Bishnoi

Date: 17.04.2026

Citation: 2026 INSC 360

--------------------------------

## #4#

**பட்டியலினச் சாதியினரை சாதிப் பெயர் கூறி இழிவுபடுத்தியதாக குற்றம் சாட்டப்படும் போது, அந்தச் சம்பவம் "பொது மக்கள் பார்வைக்குள் உள்ள இடத்தில்" நடந்தது என்பது முதல் தகவல் அறிக்கையிலேயே தெளிவாக இல்லையெனில், SC/ST (Prevention of Atrocities) Act-ன் கீழ் குற்றவியல் நடவடிக்கை தொடர முடியுமா?**




இந்த வழக்கில், மேல்முறையீட்டாளர்களும் புகார்தாரரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தந்தையிடமிருந்து வந்த சொத்துகளைப் பகிர்ந்துகொள்வது தொடர்பாக நீண்டகால குடும்பத் தகராறு இருந்து வந்தது. புகார்தாரர் மற்றும் அவரது சகோதரர்கள் பட்டியலினச் சாதியைச் சேர்ந்தவர்கள். மேல்முறையீட்டாளர்களில் முதல் மேல்முறையீட்டாளர் வேறு சாதியைச் சேர்ந்த பெண்ணாக இருந்து, தனது கணவரின் குடும்பத்தினருடன் வசித்து வந்தார். 28.01.2021 அன்று குடும்ப வீட்டு வளாகத்தில்

ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது, முதல் மேல்முறையீட்டாளர் சாதிப் பெயர்களைக் கூறி தன்னையும் தனது மனைவியையும் இழிவுபடுத்தியதாக-வும், மற்ற மேல்முறையீட்டாளர்கள் மிரட்டியதாகவும் புகார்தாரர் குற்றஞ்-சாட்டினார். இதன் அடிப்படையில் SC/ST (Prevention of Atrocities) Act, 1989 சட்டப்பிரிவு 3(1)(r), 3(1)(s) மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் சட்டப்பிரிவு 506 உடன் 34 ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, குற்றப்-பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்-டது.

விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டு-களை வடிவமைத்தது. அதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மறுஆய்வு மனுவை டெல்லி உயர்நீதி-மன்றம் தள்ளுபடி செய்தது. குற்றச்-சாட்டுகளை வடிவமைக்கும் நிலையி-லேயே சாட்சிகளின் நம்பகத்தன்மை-யை ஆராய முடியாது என்றும், முதல் தகவல் அறிக்கையிலும் சட்டப்பிரிவு 161 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் பதிவான வாக்குமூ-லங்களிலும் குற்றச்சாட்டுகளுக்கான அடிப்படை இருப்பதாகவும் உயர்நீதி-மன்றம் கருதியது.

மேல்முறையீட்டாளர்கள் தரப்பில், SC/ST Act சட்டப்பிரிவு 3(1)(r) மற்றும் 3(1)(s) ஆகியவற்றின் இன்றியமையாத கூறான ***“பொது மக்கள் பார்-வைக்குள் உள்ள இடம்”*** என்ற நிபந்தனை முதல் தகவல் அறிக்கையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்-றும், சம்பவம் குடும்ப வீட்டின் உள்ளே நடந்ததாகவே கூறப்பட்டிருப்பதால் அந்தச் சட்டத்தின் கீழ் குற்றமே உருவாகாது என்றும் வாதிடப்பட்டது. மேலும், இந்திய தண்டனைச் சட்டம் சட்டப்பிரிவு 506-க்குத் தேவையான “அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கம்” மற்றும் சட்டப்பிரிவு 34-க்குத் தேவை-யான “பொது நோக்கம்” ஆகியவை-யும் இல்லை என்பதால் குற்றச்சாட்டு-கள் தொடர முடியாது என்றும் வலியு-றுத்தினர்.

மறுபுறம், அரசுத் தரப்பும் புகார்தாரர் தரப்பும், இந்த நிலையிலேயே சாட்சி-களின் மதிப்பீடு செய்ய முடியாது என்றும், வழக்கை விசாரணைக்கு அனுப்புவதற்கு போதுமான அடிப்ப-டை இருப்பதாகவும் வாதிட்டனர்.

உச்சநீதிமன்றம் முதலில் SC/ST Act சட்டப்பிரிவு 3(1)(r) மற்றும் 3(1)(s)-ன் கூறுகளை விரிவாக ஆராய்ந்தது. **Swaran Singh v. State through Standing Counsel (2008) 8 SCC 435** தீர்ப்பில், "பொது இடம்" மற்றும் "பொது மக்கள் பார்வைக்குள் உள்ள இடம்" ஆகியவை ஒன்றல்ல என்று விளக்கப்பட்டதை நீதிமன்றம் நினைவூட்டியது. தனியார் இடமாக இருந்தாலும் பொதுமக்கள் பார்த்து உணரக்கூடியதாக இருந்தால் அது "பொது மக்கள் பார்வைக்குள் உள்ள இடம்" ஆகலாம் என்று அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது. அதே நேரத்தில், கட்டிடத்தின் நான்கு சுவர்களுக்குள், பொதுமக்கள் யாரும் இல்லாத நிலையில் நிகழ்ந்த சம்பவம் இந்த நிபந்தனையை பூர்த்தி செய்யாது என்றும் அந்தத் தீர்ப்பு தெளிவுபடுத்தியிருந்தது.

அதே சட்டக் கொள்கையை **Hitesh Verma v. State of Uttarakhand (2020) 10 SCC 710** தீர்ப்பும் உறுதிப்படுத்தியதாக உச்சநீதிமன்றம் குறிப்பிட்டது. அந்த வழக்கிலும் சம்பவம் வீட்டிற்குள் நடைபெற்றதால் "பொது மக்கள் பார்வைக்குள் உள்ள இடம்" என்ற இன்றியமையாத கூறு இல்லையென்று கூறி நடவடிக்கை ரத்து செய்யப்பட்டிருந்தது. மேலும் **Karuppudayar v. State (2025 SCC OnLine SC 215)** தீர்ப்பிலும், சம்பவம் பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படையாக இருக்க வேண்டும்; நான்கு சுவர்களுக்குள் நடந்தால் SC/ST Act-ன் கீழ் குற்றம் உருவாகாது என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை உச்சநீதிமன்றம் கவனமாக ஆய்வு செய்தபோது, சம்பவம் நடந்த இடம் குடும்பத்தின் குடியிருப்பு வீடு என்பதைத்தவிர, அது பொதுமக்கள் பார்வைக்குள் இருந்தது அல்லது சம்பவத்தை சுயாதீன பொதுமக்கள் யாரேனும் நேரில் பார்த்தனர் என்ற எந்தக் குறிப்பும் இல்லை என்று கண்டறிந்தது. புகார்தாரர் குறிப்பிட்டிருந்த நண்பர்கள் கூட சம்பவத்தை நேரில் கண்டதாக அவர்களது வாக்குமூலங்கள் காட்டவில்லை. எனவே SC/ST Act-ன் கீழ் குற்றம் உருவாகுவதற்கான அடிப்படை நிபந்-

தனையே பூர்த்தியாகவில்லை என்று நீதிமன்றம் தீர்மானித்தது.

முதல் தகவல் அறிக்கையே குற்றத்தின் இன்றியமையாத கூறுகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை State of Haryana v. Bhajan Lal, 1992 Supp (1) SCC 335 தீர்ப்பை மேற்கோள் காட்டி நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியது. குற்றத்தின் அடிப்படை கூறுகள் முதல் தகவல் அறிக்கையிலேயே இல்லையெனில், அந்த முதல் தகவல் அறிக்கை தொடர முடியாததாகிவிடும் என்று கூறியது. அதேபோல் Ramesh Chandra Vaishya v. State of Uttar Pradesh (2023) 17 SCC 615 தீர்ப்பிலும், "பொது மக்கள் பார்வைக்குள் உள்ள இடம்" என்ற கூறு இல்லாதபோது SC/ST Act-ன் கீழ் நடவடிக்கை தொடர முடியாது என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டியது.

இந்திய தண்டனைச் சட்டம் சட்டப்பிரிவு 506 தொடர்பாகவும் நீதிமன்றம் தனியாக ஆய்வு செய்தது. குற்றவியல் மிரட்டல் உருவாக, மிரட்டல் மட்டும் போதாது; அது புகார்தாரருக்கு உண்மையான அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இருக்க வேண்டும் என்ற இன்றியமையாத கூறு அவசியம் என்று நீதிமன்றம் விளக்கியது. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் அத்தகைய நோக்கம் வெளிப்படையாக தெரியவில்லை. மேலும் சட்டப்பிரிவு 34-க்குத் தேவையான ஒருங்கிணைந்த குற்ற நோக்கத்திற்கான எந்த அடிப்படையும் இல்லை என்பதால், அந்தக் குற்றச்சாட்டும் நிலைக்காது என்று தீர்மானித்தது.

இதன் அடிப்படையில், டெல்லி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும், விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டுகளை வடிவமைத்த உத்தரவுகளும் ரத்து செய்யப்பட்டன. Kirti Nagar காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையும், அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையும் முழுமையாக ரத்து செய்யப்பட்டன. மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், SC/ST (Prevention of Atrocities) Act சட்டப்பிரிவு 3(1)(r) மற்றும் 3(1)(s)-ன் கீழ் குற்றம் உருவாக, சாதி இழிவுரை அல்லது**

அவமதிப்பு "பொது மக்கள் பார்வைக்குள் உள்ள இடத்தில்" நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது கட்டாயமான சட்டக் கூறாகும்; அந்த அடிப்படை கூறு முதல் தகவல் அறிக்கையிலேயே வெளிப்படையாக இல்லையெனில், குற்றவியல் நடவடிக்கையும் குற்றப்பத்திரிகையும் தொடர முடியாது; அதேபோல் குற்றவியல் மிரட்டலுக்குத் தேவையான "அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கம்" மற்றும் சட்டப்பிரிவு 34-க்குத் தேவையான "பொது நோக்கம்" இல்லாதபோது அந்தக் குற்றச்சாட்டுகளும் நிலைக்காது.

---

IN THE SUPREME COURT OF INDIA

Criminal Appeal No. 2446 of 2026 (Arising out of SLP (Crl.) No. 9198 of 2025)

Gunjan @ Girija Kumari & Others v. State (NCT of Delhi) & Another

Coram: Justice Prashant Kumar Mishra & Justice N.V. Anjaria

Date: 11.05.2026

Citation: (2026) AIR (SC) 2399 : 2026 INSC 468

-------------------------------

## #5#

**பாகப்பிரிவினை வழக்கில் வழங்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணையில் தரப்பினரின் பங்குகள் அறிவிக்கப்பட்டு, சொத்தைப் பிரிக்க முடியாவிட்டால் ஏலம் விட வேண்டும் என்ற வழிமுறையும் குறிப்பிடப்பட்டிருந்தால், அதை இறுதித் தீர்ப்பின்றி நிறைவேற்ற முடியுமா?**




*இந்த வழக்கில், ஜெனிபர் மெசியாஸ் மற்றும் அவரது கணவர் பீட்டர் மெசியாஸ் ஆகியோர் இணைந்து 1991-ஆம் ஆண்டு ஜபல்பூரில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பை வாங்கினர். பின்னர் இருவருக்கும் இடையே திருமணப் பிரிவு ஏற்பட்டது. அதன்பின் அந்தச் சொத்து முழுவதும் பீட்டர் மெசியாஸின் அனுபவ உரிமையில் இருந்தது. இதையடுத்து ஜெனிபர் மெசியாஸ், அந்தச் சொத்தில் தனக்குரிய பாதி பங்கைப் பிரித்து தனி அனுபவ உரிமை வழங்கக் கோரி உரிமையியல் வழக்கு தொடர்ந்தார். விசாரணை நீதிமன்றம் 13.04.2012 அன்று **முதல் நிலை தீர்ப்பாணை-யை***

வழங்கி, ஜெனிபருக்கு பாதி பங்கு இருப்பதாக அறிவித்ததுடன், அவர் அனுபவ உரிமை பெறும் வரை மாதம் ரூ.1,500 உரிமையில்லா லாபமும் வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. மேலும், வழக்கறிஞர் ஆணையரை நியமித்து, சொத்தை அளவிட்டு பிரிக்க இயன்றால் அவ்வாறு பிரிக்கவும்; இயலாவிட்டால் விற்று, அதன் விற்பனைத் தொகையை இரு தரப்பினருக்கும் அவரவர் பங்கின்படி வழங்கவும் உத்தரவிட்டது.

இதற்கிடையில் பீட்டர் மெசியாஸ் உயிரிழந்ததால், அவரது உயிலின் அடிப்படையில் லியோனார்ட் ஜி.லோபோ வழக்கில் இணைக்கப்பட்டார். வழக்கறிஞர் ஆணையர் ஆய்வு செய்து, அந்த அடுக்குமாடி குடியிருப்பை எல்லை பிரித்து (metes and bounds) தனித்தனியாகப் பிரிக்க இயலாது என்று அறிக்கை அளித்தார். இதன் அடிப்படையில் நிறைவேற்று நீதிமன்றம் சொத்தை ஏலம் விடும் நடவடிக்கையைத் தொடங்கியது. இரு தரப்பினரும் ஏலத்தில் போட்டித் தொகை அளித்த நிலையில், லியோனார்ட் ஜி.லோபோ உயர்நீதிமன்றத்தை அணுகி, இறுதித் தீர்ப்பு வழங்கப்படாமல் முதல் நிலை தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியாது என்றும், நிறைவேற்று நடவடிக்கையைத் தடுக்க வேண்டும் என்றும் வாதிட்டார். உயர்நீதிமன்றமும் அந்த வாதத்தை ஏற்று, நிறைவேற்று நடவடிக்கையை ரத்து செய்து, முதலில் இறுதித் தீர்ப்பைப் பெற மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டது. இதையே எதிர்த்து ஜெனிபர் மெசியாஸ் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

மேல்முறையீட்டாளர் தரப்பில், முதல் நிலை தீர்ப்பாணையில் வெறும் பங்குகள் மட்டும் அறிவிக்கப்படவில்லை; அனுபவ உரிமை, உரிமையில்லா லாபம், பிரிக்க இயலாத நிலையில் ஏலம் விடும் முறை உள்ளிட்ட அனைத்தும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததால், அது ஒரு பகுதி முதல் நிலை தீர்ப்பாணையாகவும், ஒரு பகுதி இறுதித் தீர்ப்பாகவும் செயல்படுகிறது என்று வாதிடப்பட்டது. மேலும், வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை சொத்தைப் பிரிக்க இயலாது என்று உறுதி செய்த

பிறகு, ஏலம் மட்டுமே சட்டப்படி சாத்தியமான வழிமுறை என்பதால், புதிய இறுதித் தீர்ப்பு மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று கூறுவது தேவையற்ற நடைமுறை சிக்கல் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மறுபுறம், பிரதிவாதி தரப்பில், உரிமையியல் நடைமுறைச் சட்டம் சட்டப்பிரிவு 2(2) மற்றும் கட்டளை XX விதி 18-ன் படி முதல் நிலை தீர்ப்பாணை என்பது உரிமைகளை மட்டும் அறிவிப்பதாகும்; இறுதித் தீர்ப்பே நிறைவேற்றத்தக்கது; எனவே இறுதித் தீர்ப்பு இல்லாமல் முதல் நிலை தீர்ப்பாணையை அடிப்படையாகக் கொண்டு ஏலம் நடத்த முடியாது என்று வாதிடப்பட்டது.

உச்சநீதிமன்றம் முதலில் முதல் நிலை தீர்ப்பாணைக்கும் இறுதித் தீர்ப்புக்கும் இடையேயான வேறுபாட்டை விளக்கியது. **Shankar Balwant Lokhande v. Chandrakant Shankar Lokhande (1995) 3 SCC 413** மற்றும் **Bimal Kumar v. Shakuntala Debi (2012) 3 SCC 548** தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, முதல் நிலை தீர்ப்பாணை தரப்பினரின் உரிமைகளையும் பங்குகளையும் அறிவிக்கும்; இறுதித் தீர்ப்பு அந்த உரிமைகளை நடைமுறையில் செயல்படுத்தும் என்று கூறியது. இருப்பினும், சில சூழ்நிலைகளில் ஒரு தீர்ப்பு பகுதியளவில் முதல் நிலை தீர்ப்பாணையாகவும், பகுதியளவில் இறுதித் தீர்ப்பாகவும் அமையலாம் என்றும் வலியுறுத்தியது.

அதனைத் தொடர்ந்து, இந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் உள்ளடக்கத்தை நீதிமன்றம் ஆராய்ந்தது. அதில் ஜெனிபருக்கு பாதி பங்கு இருப்பது, அனுபவ உரிமை வழங்கப்படுவது, உரிமையில்லா லாபம் வழங்கப்படுவது, மேலும் பிரிப்பு இயலாத பட்சத்தில் சொத்தை விற்று அதன் வருவாயை பங்கின்படி பகிர வேண்டும் என்ற தெளிவான வழிமுறைகள் அனைத்தும் இடம்பெற்றிருந்தன. எனவே, தீர்ப்பின் பெயர் "முதல் நிலை தீர்ப்பாணை" என்பதையே மட்டும் பார்த்து அதன் சட்ட விளைவுகளை மறுக்க முடியாது; தீர்ப்பின் உள்ளடக்கமே முக்கியம் என்று நீதிமன்றம் கூறியது.

மேலும் **Kattukandi Edathil Krishnan v. Kattukandi Edathil Valsan (2022) 16**

SCC 71 தீர்ப்பை மேற்கோள் காட்டி, பாகப்பிரிவினை வழக்குகளில் முதல் நிலை தீர்ப்பாணை வழங்கப்பட்ட பிறகு, இறுதித் தீர்ப்பை வரைய நீதிமன்றமே தானாகவே நடவடிக்கை எடுக்க வேண்டும்; தனியாக இறுதித் தீர்ப்பு வழக்கு அல்லது புதிய மனு தாக்கல் செய்யும்படி தரப்பினரை கட்டாயப்படுத்தக் கூடாது என்றும் உச்சநீதிமன்றம் நினைவூட்டியது. இவ்வழக்கில் உயர்நீதிமன்றம் அந்தச் சட்டக் கொள்கையைப் பின்பற்றாமல், மீண்டும் இறுதித் தீர்ப்பு மனு தாக்கல் செய்யுமாறு கூறியது தவறான அணுகு-முறை என்றும் கண்டறிந்தது.

வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை-யின்படி, சொத்தை அளவிட்டு பிரிப்-பது இயலாத நிலை உறுதி செய்யப்-பட்டதால், ஏலம் நடத்தி விற்பனைத் தொகையை இரு தரப்பினருக்கும் பகிர்வதே ஒரே நடைமுறைத் தீர்வா-கும் என்று நீதிமன்றம் கூறியது. ஏற்கனவே ஏல நடைமுறையும் தொடங்கிய நிலையில்,அதைத் தடுத்து நிறுத்திய உயர்நீதிமன்ற உத்தரவு சட்டத்திற்கு முரணானது என்றும், அது நிறைவேற்று நீதிமன்றத்தின் அதிகாரத்தில் தேவையற்ற தலையீடு என்றும் தீர்மானித்தது.

இதனடிப்படையில், உயர்நீதிமன்றத்-தின் உத்தரவுகள் ரத்து செய்யப்-பட்டன. நிறைவேற்று வழக்கு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு, அதே வழக்கறிஞர் ஆணையர் அல்லது புதிய ஆணையர் மூலம் சொத்தை ஏலம் நடத்தி, விற்பனைத் தொகையை இரு தரப்பி-னருக்கும் அவரவர் பங்கின்படி பகிர-வும், உரிமையில்லா லாபத்தையும் கணக்கில் கொண்டு இறுதி வழங்கல் செய்யவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்-டது. வயதான மேல்முறையீட்டா-ளரின் நிலையை கருத்தில் கொண்டு, இரண்டு மாதங்களுக்குள் நடவடிக்கை-யை முடிக்கவும் விசாரணை நீதிமன்-றத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், "பாகப்பிரி-வினை வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை என்ற பெயரில் வழங்கப்-பட்டிருந்தாலும், அதில் உரிமைகள், அனுபவ உரிமை, உரிமையில்லா லாபம் மற்றும் சொத்தைப் பிரிக்க முடியாதபட்சத்தில் ஏலம் விடும் நடைமுறை போன்ற இறுதித் தீர்ப்பின் கூறுகளும் இடம்பெற்றிருந்தால், அது**

பகுதியளவில் நிறைவேற்றத்தக்க தீர்ப்பாகக் கருதப்படும்; பாகப்பிரிவினை வழக்குகளில் இறுதித் தீர்ப்பை வரைய நீதிமன்றமே தானாக நடவடிக்கை எடுக்க வேண்டும்; தேவையற்ற புதிய இறுதித் தீர்ப்பு மனுவை கட்டாயப்படுத்த முடியாது" என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE SUPREME COURT OF INDIA

Civil Appeal Nos. ... of 2026 (Arising out of SLP (Civil) Nos. 8716–8717 of 2026)

Jennifer Messias v. Leonard G. Lobo

Coram: Justice K.V. Viswanathan & Justice S.V.N. Bhatti

Date: 18.05.2026

Citation: 2026 INSC 502

--------------------------------

## #6#

**வரதட்சணை கொடுமையால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்ட மனைவி வீட்டிற்குள் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்திருந்தால், மருத்துவ ஆதாரங்கள் அது தற்கொலை அல்ல; கொலை செய்து பின்னர் தூக்கில் தொங்கவிடப்பட்டதாக நிரூபிக்கும்போது, கணவர் எந்த விளக்கமும் அளிக்காமல் மௌனமாக இருந்தால், அவரை கொலைக் குற்றத்திற்கு பொறுப்பாக்க முடியுமா?**




சோமா ஆச்சார்ஜி என்ற இளம் பெண் திருமணமாகி சில மாதங்களிலேயே கணவர் கவுர் ஆச்சார்ஜி மற்றும் அவரது குடும்பத்தினரால் மோட்டார் சைக்கிள் மற்றும் பணம் வரதட்சணையாக கேட்டு தொடர்ந்து கொடுமைப்படுத்தப்பட்டார். பலமுறை அவர் தனது பெற்றோரிடம் அழுது முறையிட்டார். ஒவ்வொரு முறையும் குடும்பத்தினரும், ஊர் பெரியவர்களும் சமரசக் கூட்டங்களை நடத்தி, "இனிமேல் துன்புறுத்த மாட்டோம்" என்ற உறுதிமொழிகளின் அடிப்படையில் மீண்டும் அவரை கணவர்

வீட்டிற்கு அனுப்பினர். ஆனால் அந்த உறுதிமொழிகள் அனைத்தும் வெறும் காகிதங்களாகவே முடிந்தன. இறுதியில், 16.06.2007 அன்று சோமா தனது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் இறந்து கிடப்பதாக அவரது தந்தைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சந்தேகமடைந்த தந்தை உடனடியாக குற்றப்பதிவு செய்ய, விசாரணை தொடங்கப்பட்டது. விசாரணை நீதிமன்றம் கணவரை இந்திய தண்டனைச் சட்டம் சட்டப்பிரிவு 302 மற்றும் 498-A-ன் கீழ் தண்டித்தது. மேல்முறையீட்டு நீதிமன்றமும் அதனை உறுதிப்படுத்தியது. இதனை எதிர்த்தே உச்சநீதிமன்றத்தில் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

மேல்முறையீட்டாளர் தரப்பில், இறந்தவர் தற்கொலை செய்து கொண்டார்; நேரடி கண் சாட்சி யாரும் இல்லை; குடும்ப உறுப்பினர்களில் மற்ற மூவரும் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், கணவரை மட்டும் தண்டிப்பது நியாயமல்ல; சுத்தியலை கைப்பற்றியதாக கூறிய சாட்சிகளும் வழக்கை முழுமையாக ஆதரிக்கவில்லை; ஆகவே சந்தேகத்தின் பலன் வழங்கப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டது. மேலும், மருத்துவ ஆதாரங்களை மட்டுமே கொண்டு கொலை என்று முடிவு செய்ய முடியாது என்றும் வலியுறுத்தப்பட்டது.

மாநில அரசு தரப்பில், உடற்கூறு மருத்துவ அறிக்கை தற்கொலை என்ற கோட்பாட்டை முற்றிலும் நிராகரிக்கிறது; முதலில் தலையில் மழுங்கிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பின்னர் உடல் தூக்கில் தொங்கவிடப்பட்டுள்ளது என்பதை மருத்துவர் கூறியுள்ளார்; திருமண வாழ்க்கை முழுவதும் வரதட்சணை கொடுமை தொடர்ந்தது என்பதை ஊராட்சி தலைவர்கள், அயலவர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் ஒரே குரலில் சாட்சியமளித்துள்ளனர்; சம்பவம் நடந்த நேரத்தில் கணவரே இறந்தவருடன் வீட்டில் இருந்தார்; ஆனால் அவர் தனது மனைவிக்கு இந்த காயங்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பதற்கான எந்த நம்பகமான விளக்கத்தையும் அளிக்கவில்லை; எனவே இந்திய சாட்சியச் சட்டம் சட்டப்பிரிவு 106-ன் அடிப்படையில் அவர்மீது இருந்த

விளக்கச் சுமையை அவர் நிறைவேற்-றவில்லை என்று வாதிடப்பட்டது.

உச்சநீதிமன்றம் முதலில் மரணத்தின் தன்மையை ஆய்வு செய்தது. உடற்கூறு பரிசோதனை செய்த மருத்துவர், மார்பு, தாடை மற்றும் தலையில் இருந்த காயங்கள், தலையின் பின்புற எலும்பு முறிவு, வழக்கமான தூக்குக் கயிற்றுத் தடம் இல்லாமை, கழுத்தில் சிராய்ப்பு மற்றும் இரத்தக் கசிவு இல்லாமை, கண்கள், நாக்கு, முகம் மற்றும் தொண்டைப் பகுதிகளில் தற்கொலைத் தூக்கில் பொதுவாக காணப்படும் அறிகுறிகள் எதுவும் இல்லாதது போன்ற காரணங்களின் அடிப்படையில், "முதலில் மழுங்கிய ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்டு பின்னர் தூக்கில் தொங்கவிடப்பட்-டுள்ளார்" என்று கருத்து தெரிவித்தி-ருந்தார். இந்த மருத்துவக் கருத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. மே-லும் *Modi's Medical Jurisprudence and Toxicology* மற்றும் *Dr. C.K. Parikh's Textbook of Medical Jurisprudence and Toxicology* ஆகிய மருத்துவ நூல்களில், உடலில் தாக்குதல் காயங்கள் இருந்தும் பின்னர் தூக்கில் தொங்கிய நிலையில் உடல் காணப்பட்டால், அது செயற்கையாக உருவாக்கப்பட்ட தூக்கு (simulated hanging) அல்லது கொலைக்குப் பின் தூக்கில் தொங்கவிடப்பட்ட நிலையா-க இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ள கொள்கைகளையும் நீதிமன்றம் மேற்-கோள் காட்டியது. இவ்வழக்கில் மருத்-துவர் குறிப்பிட்டுள்ள அனைத்து அறிகுறிகளும் அந்த மருத்துவக் கோட்பாடுகளோடு முழுமையாக ஒத்துப்போவதாக நீதிமன்றம் கண்ட-றிந்தது. எனவே இது தற்கொலை அல்ல; கொலை செய்து பின்னர் தூக்கில் தொங்கவிடப்பட்ட மரணம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று தீர்மானித்தது.

அதனைத் தொடர்ந்து, வரதட்சணை கொடுமை தொடர்பான ஆதாரங்-களை நீதிமன்றம் ஆராய்ந்தது. ஊராட்சி துணைத் தலைவர், அயலவர்கள், இறந்தவரின் பெற்றோர் உள்ளிட்ட பலர், திருமணத்திற்குப் பிறகு மோட்டார் சைக்கிள் மற்றும் பணம் கோரி கணவர் தொடர்ந்து கொடுமைப்படுத்தியதாகவும், பலமுறை ஊர் பெரியவர்கள் முன்னி-

லையில் சமரசக் கூட்டங்கள் நடைபெற்றதாகவும், ஒவ்வொரு முறையும் "இனிமேல் துன்புறுத்த மாட்டோம்" என்று எழுதப்பட்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் சாட்சியமளித்திருந்தனர். சோமா பலமுறை தனது பெற்றோரிடம் உயிரைக் காப்பாற்றுமாறு கதறி அழுதும், ஒவ்வொரு முறையும் சமரசம் செய்து மீண்டும் கணவர் வீட்டிற்கே அனுப்பப்பட்டதும் ஆதாரங்களால் நிரூபிக்கப்பட்டது. இந்த தொடர்ச்சியான கொடுமைகளே குற்றத்திற்கான உந்துசக்தியை (motive) உறுதிப்படுத்துகின்றன என்று நீதிமன்றம் கூறியது.

மற்ற மூன்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டதால் கணவரும் விடுதலை பெற வேண்டும் என்ற வாதத்தையும் நீதிமன்றம் ஏற்கவில்லை. மாமியாரும், மைத்துனரும் வேறு குடியிருப்பு பகுதியில் வசித்தனர் என்பதன் அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் சம்பவம் நடந்த அறையிலேயே கணவர் இறந்தவருடன் வசித்தது நிரூபிக்கப்பட்டிருந்தது. எனவே அவரின் நிலை மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் ஒப்பிட முடியாது என்று நீதிமன்றம் கூறியது.

இந்த நிலையில், இந்திய சாட்சியச் சட்டம் சட்டப்பிரிவு 106-ன் பயன்பாட்டை உச்சநீதிமன்றம் விளக்கியது. **Trimukh Maroti Kirkan v. State of Maharashtra (2006) 10 SCC 681** தீர்ப்பை மேற்கோள் காட்டி, வீட்டின் தனியுரிமைக்குள் நடைபெறும் கொலை வழக்குகளில் ஆரம்பச் சுமை அரசு தரப்பின்மீது இருந்தாலும், சம்பவ நேரத்தில் வீட்டில் இருந்த நபர் அந்த மரணம் எவ்வாறு ஏற்பட்டது என்பதை நம்பத்தகுந்த வகையில் விளக்க வேண்டிய இணைச் சுமை அவர்மீது ஏற்படும் என்று மீண்டும் உறுதிப்படுத்தியது. அதே தீர்ப்பில் மேற்கோள் காட்டப்பட்ட **Nika Ram v. State of Himachal Pradesh, Ganeshlal v. State of Maharashtra, State of U.P. v. Dr. Ravindra Prakash Mittal**, மற்றும் **State of Tamil Nadu v. Rajendran** ஆகிய தீர்ப்புகளில், மனைவி வீட்டிற்குள் மர்மமான முறையில் இறந்தபோது கணவர் எந்த நியாயமான விளக்கமும் அளிக்கத் தவறினால், அது குற்றத்தை உறுதிப்-

படுத்தும் முக்கியமான சூழ்நிலைச் சாட்சியாக அமையும் என்று கூறப்பட்டுள்ள சட்டக் கொள்கையையும் நீதிமன்றம் பயன்படுத்தியது.

இவ்வழக்கில், கணவர் சம்பவ நேரத்தில் வீட்டிலேயே இருந்தது மறுக்கப்படவில்லை. மாறாக, அவர் தான் இறந்தவரின் தந்தைக்கு தொலைபேசியில் தகவல் தெரிவித்திருந்தார். இருப்பினும், உடலில் இருந்த கடுமையான காயங்கள் எவ்வாறு ஏற்பட்டன, மருத்துவர் கூறிய மருத்துவ ஆதாரங்களை எவ்வாறு மறுப்பது என்பதற்கான எந்த விளக்கத்தையும் அவர் குற்றவியல் நடைமுறைச் சட்டம் சட்டப்பிரிவு 313-ன் கீழான விசாரணையிலும் வழங்கவில்லை. அவரது ஒரே விளக்கம் "தற்கொலை" என்பதாக இருந்தது. ஆனால் அந்த விளக்கம் மருத்துவ ஆதாரங்களால் முற்றிலும் பொய்யாக நிரூபிக்கப்பட்டது. ஆகவே, மருத்துவ ஆதாரங்கள், வரதட்சணை கொடுமை, தொடர்ந்து நடைபெற்ற சமரசக் கூட்டங்கள், சம்பவ நேரத்தில் கணவர் வீட்டில் இருந்தமை, அவர் எந்த விளக்கமும் அளிக்காதமை ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து, கணவரே தனது மனைவியை கொலை செய்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கின்றன என்று உச்சநீதிமன்றம் தீர்மானித்தது.

இதனடிப்படையில், மேல்முறையீடு முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டது. இந்திய தண்டனைச் சட்டம் சட்டப்பிரிவு 302 மற்றும் 498-A-ன் கீழ் விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை மற்றும் பிற தண்டனைகள் உறுதிப்படுத்தப்பட்டன. மேலும், மேல்முறையீட்டாளர் தலைமறைவாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டதால், அவரை உடனடியாக கைது செய்து தண்டனையை நிறைவேற்றுவதற்காக திரிபுரா மாநில காவல்துறை தலைமை இயக்குநருக்கு சிறப்பு குழுவை அமைத்து நடவடிக்கை எடுக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், வீட்டிற்குள் மனைவி மர்மமான முறையில் இறந்த நிலையில் மருத்துவ ஆதாரங்கள் கொலை செய்து பின்னர் தூக்கில் தொங்கவிடப்பட்டதாக உறுதிப்படுத்தினால், சம்பவ நேரத்தில் வீட்டில் இருந்த கணவர் இந்திய சாட்சியச்**

சட்டம் சட்டப்பிரிவு 106-ன் கீழ் நம்பகமான விளக்கம் அளிக்க வேண்டிய கடமையில் இருப்பார்; அத்தகைய விளக்கம் இல்லாதபோது, மருத்துவ ஆதாரங்கள் மற்றும் சூழ்நிலைச் சாட்சிகளின் அடிப்படையில் அவரை கொலைக் குற்றத்திற்கு பொறுப்பாக்க முடியும்; தொடர்ந்து நடைபெற்ற வரதட்சணை கொடுமை குற்றத்திற்கான உந்துசக்தியை உறுதிப்படுத்தும் முக்கியமான சூழ்நிலைச் சாட்சியாகும்.

---

IN THE SUPREME COURT OF INDIA

Criminal Appeal No. 1803 of 2014

Gour Acharjee v. The State of Tripura & Others

Coram: Justice Prashant Kumar Mishra & Justice K. V. Viswanathan

Date: 25.05.2026

Citation: (2026) AIR (SC) 2648 : 2026 INSC 535

---

## #7#

**ஒருவர் தனது பணத்தில் வேறொருவரின் பெயரில் வாங்கப்பட்ட சொத்தை, பின்னர் அந்த நபர் எழுதிய உயிலின் அடிப்படையில் உரிமை கோரி வழக்கு தொடரும்போது, அந்த வழக்கை Prohibition of Benami Property Transactions Act-ஆல் தடை செய்யப்பட்டதாகக் கூறி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 11-ன் கீழ் தொடக்க நிலையிலேயே நிராகரிக்க முடியுமா?**




இந்த வழக்கில், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த டி.ஏ. ஸ்ரீனிவாஸ் என்பவர், கே. ரகுநாத் என்பவர் 20.04.2018 அன்று எழுதியதாகக் கூறப்படும் பதிவு செய்யப்பட்ட உயிலின் அடிப்படையில், வழக்குச் சொத்துகளின் உரிமை தனக்கே சொந்தமானது என்று விளம்புகை கோரி உரிமையியல் வழக்கு தொடர்ந்தார். மேலும், உயிலின் அட்டவணையில் ஏற்பட்டதாகக் கூறப்பட்ட எழுத்துப் பிழைகளைச் சரிசெய்யவும், அதனைத் தொடர்ந்து நிரந்தரத் தடை பரிகாரமும் கோரினார். கே. ரகுநாத் 04.05.2019 அன்று

இறந்துவிட்ட நிலையில், அவரது மனைவியும் மகன்களுமான பிரதிவா-திகள், ஏற்கனவே 28.01.2016 அன்று அவர் தங்களுக்காக பதிவு செய்யப்-பட்ட உயில் எழுதி வைத்திருந்தார் என்றும், அதன் அடிப்படையில் வரு-வாய்ப் பதிவுகள் தங்கள் பெயரில் மாற்றப்பட்டு, தாங்களே அனுபவ உரிமையில் உள்ளோம் என்றும் தெரிவித்தனர். மேலும், வழக்குதாரரே ரகுநாத்தின் கொலை வழக்கில் குற்றஞ்-சாட்டப்பட்டவர் என்றும் வாதிட்-டனர்.

இதனைத் தொடர்ந்து, பிரதிவாதிகள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 11(a) மற்றும் (d)-ன் கீழ் வழக்கு மனுவை நிராகரிக்க மனு தாக்கல் செய்தனர். வழக்குதாரரின் சொந்த மனுவிலேயே, சொத்துகள் அவரது பணத்தில் வாங்கப்பட்-டாலும், வேளாண் நிலம் வாங்குவதில் இருந்த சட்டத் தடையால் கே. ரகுநாத் பெயரில் வாங்கப்பட்டதாகக் கூறப்-பட்டிருப்பதால், இது வெளிப்படை-யான Benami பரிவர்த்தனை என்றும், Prohibition of Benami Property Trans-actions Act சட்டப்பிரிவுகள் 3, 4 மற்றும் 45-ன் அடிப்படையில் இத்தகைய உரிமையை நீதிமன்றத்தில் கோர இயலாது என்றும் வாதிட்டனர். உயில் என்பது வெறும் மறைமுக முயற்சி மட்டுமே; உண்மையில் Be-nami உரிமையை அமல்படுத்தும் நோக்கத்திலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினர். மேலும், **T. Arivandandam v. T.V. Satyapal (1977) 4 SCC 467, Valliam-mal v. Subramaniam (2004) 7 SCC 233, K. Akbar Ali v. K. Umar Khan (2021) 14 SCC 51, Sree Surya Devel-opers v. N. Sailesh Prasad (2022) 5 SCC 736**, மற்றும் **Ramisetty Venka-tanna v. Nasyam Jamal Saheb (2024) 18 SCC 426** ஆகிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, வழக்கின் உண்மையான தன்மையை நீதிமன்றம் ஆராய்ந்து, சட்டத்தால் தடை செய்யப்பட்டதாகத் தெரிந்தால் தொடக்க நிலையிலேயே நிராகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

வழக்குதாரர் தரப்பில், இந்த வழக்கு Benami உரிமையை அடிப்படையாகக் கொண்டதல்ல; பதிவு செய்யப்பட்ட உயிலின் மூலம் கிடைத்த உரிமையை

அடிப்படையாகக் கொண்டது என்று வாதிடப்பட்டது. உயிலின் உண்மைத்தன்மை, Benami பரிவர்த்தனை இருந்ததா, நம்பிக்கை உறவு (fiduciary relationship) இருந்ததா போன்றவை அனைத்தும் சாட்சியங்கள் மூலம் மட்டுமே நிரூபிக்க வேண்டிய சட்டம் மற்றும் பொருண்மை சார்ந்த கேள்விகள் என்றும், அவற்றை கட்டளை VII விதி 11-ன் கீழ் தீர்மானிக்க முடியாது என்றும் கூறினர். மேலும், **Liverpool & London S.P. & I. Association Ltd. v. M.V. Sea Success I (2004) 9 SCC 512, Popat and Kotecha Property v. SBI Staff Association (2005) 7 SCC 510, P.V. Guru Raj Reddy v. P. Neeradha Reddy (2015) 8 SCC 331, Pawan Kumar v. Babulal (2019) 4 SCC 367, Marcel Martins v. M. Printer (2012) 5 SCC 342**, மற்றும் **Shaifali Gupta v. Vidya Devi Gupta (2025 INSC 739)** ஆகிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, வழக்கு மனுவில் கூறப்பட்டுள்ள தகவல்களையே உண்மையெனக் கருதி பரிசீலிக்க வேண்டும்; பிரதிவாதியின் எதிர்வாதங்களையோ அல்லது வழக்கின் உண்மைத்தன்மையையோ இந்த நிலையிலேயே ஆய்வு செய்ய முடியாது என்று வாதிட்டனர்.

உச்சநீதிமன்றம் முதலில் கட்டளை VII விதி 11-ன் நோக்கத்தையும் வரம்பையும் விரிவாக ஆய்வு செய்தது. வழக்கு மனுவை நிராகரிப்பது என்பது விசாரணைக்கு முன்பே வழக்கை முடிவுக்குக் கொண்டுவரும் மிகக் கடுமையான அதிகாரம் என்பதால், அது மிகுந்த எச்சரிக்கையுடன் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறியது. வழக்கு மனுவில் உள்ள அனைத்து கூற்றுகளும் இந்த நிலையிலே உண்மை எனக் கருதப்பட வேண்டும்; பிரதிவாதியின் எழுத்துப்பதில், எதிர்வாதம் அல்லது சாட்சிகளை நீதிமன்றம் கருத்தில் கொள்ள முடியாது என்றும் விளக்கியது. அதே நேரத்தில், வெறும் திறமையான வரைவு மூலம் செயற்கையாக வழக்கு காரணம் உருவாக்கப்பட்டிருந்தால், நீதிமன்றம் அதன் உண்மையான தன்மையை அர்த்தமுள்ள முறையில் ஆய்வு செய்து தேவையான இடத்தில் வழக்கை நிராகரிக்கலாம் என்றும் **T. Arivandandam** தீர்ப்பில் கூறப்பட்ட கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தியது.

Benami சட்டத்தின் நோக்கம், அதன் 2016 திருத்தத்தின் விளைவு, சட்டப்பிரிவு 2(9)-இல் உள்ள Benami வரையறை, சட்டப்பிரிவு 45-இல் உள்ள உரிமையியல் நீதிமன்ற அதிகாரத் தடை, Fiduciary Capacity விதிவிலக்கு, 2016 திருத்தத்தின் எதிர்நோக்கிச் செயல்பாடு மற்றும் பின்னோக்கிச் செயல்பாடு ஆகிய அனைத்தையும் நீதிமன்றம் விரிவாக ஆய்வு செய்தது. Benami சட்டம் சட்டவிரோதமான பெயரளவு பரிவர்த்தனைகளைத் தடுப்பதற்காக இயற்றப்பட்டாலும், ஒவ்வொரு வழக்கிலும் அது பொருந்துமா என்பது வழக்கு மனுவிலிருந்து மட்டும் தெளிவாகத் தெரிய வேண்டும்; இல்லையெனில் முழுமையான விசாரணை அவசியம் என்றும் கூறியது. மேலும், Fiduciary Relationship இருந்ததா இல்லையா என்பது சட்டமும் உண்மையும் கலந்த கேள்வி என்பதால், சாட்சியமின்றி தீர்மானிக்க முடியாது என்றும் குறிப்பிட்டது.

இந்த வழக்கின் மனுவைப் பொருளுடன் வாசித்தபோது, வழக்குதாரர் தனது உரிமையை நேரடியாக உயிலின் அடிப்படையில் முன்வைத்திருப்பது தெரியவருகிறது என்று நீதிமன்றம் கூறியது. அவர் கூறிய நிதி ஏற்பாடுகள், கே. ரகுநாத்துடன் இருந்த உறவு, உயிலின் செல்லுபடியாக்தன்மை, Benami சட்ட விதிவிலக்கு பொருந்-துமா என்பவை அனைத்தும் விசாரணையில் மட்டுமே நிரூபிக்கப்பட வேண்டியவை. மனுவிலிருந்தே இந்த வழக்கு சட்டத்தால் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டதாக உறுதியாகக் கூற முடியாது. அதுபோல, உயில் உண்மையா, போலியா, Benami நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதா என்பதும் தொடக்க நிலையிலேயே தீர்மானிக்க முடியாத கேள்விகள் என்று நீதிமன்றம் கண்டறிந்தது.

எனவே, விசாரணை நீதிமன்றம் வழக்கு மனுவை நிராகரித்தது தவறானது என்றும், உயர்நீதிமன்றம் அதனை ரத்து செய்து வழக்கை மீண்டும் விசாரணைக்கு அனுப்பிய உத்தரவு சரியானது என்றும் உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியது. இதனால் பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது; வழக்கு அதன் தகுதியின்

அடிப்படையில் முழுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 11-ன் கீழ் வழக்கு மனுவை நிராகரிக்கும்போது, மனுவிலுள்ள கூற்றுகள் மட்டுமே பரிசீலிக்கப்பட வேண்டும்; Benami சட்டம் பொருந்துமா, உயில் உண்மையா, நம்பிக்கை உறவு இருந்ததா போன்ற கலப்பு சட்ட–உண்மைக் கேள்விகள் சாட்சியங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டியவை; மனுவிலிருந்தே வழக்கு சட்டத்தால் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டதாகத் தெளிவாகத் தெரியாதவரை, வழக்கை தொடக்க நிலையிலேயே நிராகரிக்க முடியாது என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.**

---

IN THE SUPREME COURT OF INDIA

Civil Appeal No. 7370 of 2026 (Arising out of SLP (C) No. 7924 of 2024)

Manjula & Others v. D.A. Srinivas

Coram: Justice J.B. Pardiwala & Justice R. Mahadevan

Date: 08.05.2026

Citation: 2026 INSC 465

--------------------------------

## #8#

**1956-க்கு முன் பாகப்பிரிவில் கிடைத்த சொத்து என்பதால் மட்டும் அது தனிச்சொத்தாக மாறிவிடுமா, அல்லது குடும்பத்தினர் அதனை கூட்டுக் குடும்பச் சொத்தாக நடத்தினால் அதன் இயல்பு தொடருமா — அத்தகைய சொத்தில் எழுதப்பட்ட உயில் செல்லுமா?**




இந்த வழக்கில், வாதியான கவுசல்யாதேவி, தனது தாத்தா ஆறுமுக கவுண்டரின் சொத்துகளில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தொடர்ந்தார். வாதி, இரண்டாம் பிரதிவாதியான நடராஜனின் முதல் மனைவிக்கு பிறந்த மகள். வழக்கில் இடம்பெற்ற முதல் சொத்து, 23.02.1952 அன்று நடைபெற்ற குடும்பப் பாகப்பிரிவினையில் ஆறுமுக கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட 'C' அட்டவணை சொத்தாகும். இரண்டாம் சொத்து, முதல் சொத்தின் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டதாக வாதி கூறினார். தமிழ்நாடு இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம், 1990 அமலுக்கு வந்தபோது திருமணம்

ஆகாத மகளாக இருந்ததால், இரு சொத்துகளிலும் தனக்கு பங்குரிமை உண்டு என்று வாதிட்டார். மேலும், ஆறுமுக கவுண்டர் தனது பேரன் விவேக்கிற்கு ஆதரவாக 20.02.1996 அன்று எழுதியதாகக் கூறப்பட்ட உயில் போலியாக உருவாக்கப்பட்டதாகவும், அது தன்னை கட்டுப்படுத்தாது என்றும் தெரிவித்தார்.

பிரதிவாதிகள் தரப்பில், முதல் சொத்து 1952-ஆம் ஆண்டு, அதாவது இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956 அமலுக்கு வருவதற்கு முன்பே ஆறுமுக கவுண்டருக்கு பாகப்பிரிவில் ஒதுக்கப்பட்டதால், அது அவரது தனிச்சொத்தாக மாறிவிட்டது என்றும், எனவே அவர் அதனை உயில் மூலம் தனது பேரனுக்கு வழங்க முழு அதிகாரம் பெற்றிருந்தார் என்றும் வாதிட்டனர். இரண்டாம் சொத்து, நடராஜன் தனது பின்னல் தொழில் மூலம் சம்பாதித்த வருமானத்தில் வாங்கிய தனிச்சொத்து என்பதால், அதிலும் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் தெரிவித்தனர்.

விசாரணை நீதிமன்றம், உயில் சட்டப்படி நிரூபிக்கப்படவில்லை என்றும், முதல் சொத்து மட்டும் கூட்டுக் குடும்ப மூதாதையர் சொத்து என்றும், இரண்டாம் சொத்து நடராஜனின் தனிச்சொத்து என்றும் தீர்மானித்து, முதல் சொத்தில் மட்டும் வாதிக்கு ஆரம்ப பாகப்பிரிவினைத் தீர்ப்பு வழங்கியது. இதை எதிர்த்து நான்காம் மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகள் மேல்முறையீடு செய்தனர்.

மேல்முறையீட்டில், பிரதிவாதிகள், பதிவு செய்யப்பட்ட உயில் என்பதால் அதற்கு உண்மைத்தன்மை குறித்த முன்அனுமானம் உண்டு என்றும், **Paneerselvan @ Nellappan (Died) v. Amsavalli** தீர்ப்பின்படி உயில் நிரூபிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்றும் வாதிட்டனர். மேலும், வாதி பல ஆண்டுகளாக சொத்தில் அனுபவ உரிமையில் இல்லாததால், தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் சட்டப்பிரிவு 37(2)-ன் கீழ் வழக்கை மதிப்பீடு செய்ய முடியாது என்றும் தெரிவித்தனர். இதற்கு பதிலாக, வாதி தரப்பில், 1952-க்கு முன் அல்லது பின் என்பதைக் காட்டிலும், அந்தச் சொத்து பின்னர் குடும்பத்தினரால் எவ்வாறு நடத்தப்-

பட்டது என்பதே அதன் தன்மையை நிர்ணயிக்கும் என்றும், **N. Marithoppai v. Alamelu**, அதில் பின்பற்றப்பட்ட **Neelavathi v. N. Natarajan (1980 (2) SCC 247)** தீர்ப்புகளின்படி, கூட்டுச் சொத்தில் ஒரு பங்குதாரர் வெளிப்படையாக விலக்கப்பட்டிருப்பது நிரூபிக்கப்படாத வரை, அவர் கூட்டான அனுபவ உரிமையில் இருப்பதாக சட்டம் முன்அனுமானம் செய்கிறது என்றும் வாதிடப்பட்டது.

நீதிமன்றம், வழக்கின் மையக் கேள்வியாக முதல் சொத்தின் தன்மையை ஆராய்ந்தது. Ex.A1 பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலம், 23.02.1952 அன்று அந்தச் சொத்து ஆறுமுக கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டிருப்பது உண்மை என்றாலும், அதனால் மட்டும் அது அவரது தனிச்சொத்தாக மாறிவிட்டது என்று கூற முடியாது என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. குறிப்பாக, Ex.A3 மற்றும் Ex.A4 அடமான ஆவணங்களில், 1966 மற்றும் 1983-ஆம் ஆண்டுகளில் ஆறுமுக கவுண்டரும் அவரது மகன்களும் இணைந்து அந்தச் சொத்தை அடமானம் வைத்திருப்பதை நீதிமன்றம் முக்கியமாக எடுத்துக்காட்டியது. இந்த ஆவணங்கள், ஆறுமுக கவுண்டரே அந்தச் சொத்தை தனது தனிச்சொத்தாக நடத்தாமல், கூட்டுக் குடும்பச் சொத்தாகவே நடத்தி வந்ததை வெளிப்படுத்துகின்றன என்று நீதிமன்றம் கண்டறிந்தது. எனவே, பாகப்பிரிவு இந்து வாரிசுரிமைச் சட்டம், 1956 அமலுக்கு வருவதற்கு முன் நடைபெற்றிருந்தாலும், குடும்பத்தினரின் நடத்தையால் அந்தச் சொத்தின் கூட்டுக் குடும்பத் தன்மை தொடர்ந்தது என்று நீதிமன்றம் தீர்மானித்தது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம், 1990 அமலுக்கு வந்த நாளில் திருமணம் ஆகாத மகளாக இருந்த வாதி, பிறப்புரிமை மூலம் அந்தச் சொத்தில் பங்குரிமை பெற்றவர் என்று நீதிமன்றம் முடிவு செய்தது.

உயில் தொடர்பாக, அசல் உயில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை; பதிவு நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டிருந்தது. உயிலின் சான்றொப்பச் சாட்சியாக விசாரிக்கப்பட்ட

D.W.3, உயிலை எழுதியவர் தனது முன்னிலையில் கையெழுத்திட்டார், தானும் அவருடைய முன்னிலையில் கையெழுத்திட்டார் என்பதைக் கட்டாயமாக நிரூபிக்கவில்லை. இந்திய சாட்சியச் சட்டம் சட்டப்பிரிவு 68 மற்றும் இந்திய வாரிசுரிமைச் சட்டம் சட்டப்பிரிவு 63 ஆகியவற்றின் கட்டாய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், பதிவு செய்யப்பட்டிருப்பது மட்டும் உயிலை செல்லுபடியாக்காது என்று நீதிமன்றம் தீர்மானித்தது. **Paneerselvan @ Nellappan v. Amsavalli** தீர்ப்பில், பதிவு செய்யப்பட்ட உயிலுடன் சேர்த்து சட்டப்படி சான்றொப்பமும் நிரூபிக்கப்பட்டிருந்ததால் மட்டுமே அந்த உயில் ஏற்றுக்கொள்ளப்பட்டது; இவ்வழக்கில் அத்தகைய நிரூபணம் இல்லாததால், அந்தத் தீர்ப்பு பொருந்தாது என்றும் நீதிமன்றம் விளக்கியது.

நீதிமன்றக் கட்டணம் தொடர்பாக, **N. Marithoppai v. Alamelu, Neelavathi v. N. Natarajan** தீர்ப்புகளைப் பின்பற்றி, கூட்டுச் சொத்தில் பங்குதாரர் ஒருவரை வெளிப்படையாக விலக்கி வைத்திருப்பது நிரூபிக்கப்படாத வரை, அவர் சட்டப்படி கூட்டான அனுபவ உரிமையில் இருப்பதாக கருதப்படுவார்; எனவே, தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் சட்டப்பிரிவு 37(2)-ன் கீழ் வழக்கை மதிப்பீடு செய்து தாக்கல் செய்தது சரியானதே என்று நீதிமன்றம் கூறியது. மேலும், இரண்டாம் சொத்து தொடர்பான தீர்ப்பை வாதி மேல்முறையீடு செய்யாததால், மேல்முறையீடு முதல் சொத்தை மட்டுமே சார்ந்ததாக இருப்பதாகவும் குறிப்பிட்டது.

இறுதியாக, முதல் சொத்து கூட்டுக் குடும்ப மூதாதையர் சொத்து என்றும், வாதிக்கு பிறப்புரிமை உண்டு என்றும், உயில் சட்டப்படி நிரூபிக்கப்படாததால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் தீர்மானித்த நீதிமன்றம், விசாரணை நீதிமன்றம் வழங்கிய ஆரம்ப பாகப்பிரிவினைத் தீர்ப்பில் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி, மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தது.

**இந்த தீர்ப்பின் மூலம், 1956-க்கு முன் பாகப்பிரிவில் ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்பதால் மட்டும் அது அவரது தனிச்சொத்தாக மாறிவிடாது;**

பின்னர் குடும்பத்தினர் அதனை கூட்டுக் குடும்பச் சொத்தாக நடத்தி-னால் அதன் தன்மை தொடரும். அத்தகைய சொத்தில் எழுதப்பட்ட உயில், இந்திய சாட்சியச் சட்டம் சட்டப்பிரிவு 68 மற்றும் இந்திய வாரிசு-ரிமைச் சட்டம் சட்டப்பிரிவு 63-ன் படி முறையாக நிரூபிக்கப்படாவிட்டால், அது உரிமையை மாற்றாது; மேலும், 1990 தமிழ்நாடு இந்து வாரிசுரிமைத் திருத்தச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள மகளுக்கு பிறப்புரிமை மூலம் பங்குரிமை உண்டு.

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

A.S. No. 917 of 2024 & C.M.P. No. 24109 of 2024

A. Krishnasamy Gounder & Another v. M. Kowsalyadevi & Others

Coram: Justice P.B. Balaji

Date: 30.03.2026

Citation: 2026:MHC:1325

--------------------------------

**#9#**

**மோட்டார் விபத்தில் காயமடைந்தவர் தனது Mediclaim காப்பீட்டின் மூலம் மருத்துவச் செலவை ஏற்கனவே பெற்றிருந்தால், அதே மருத்துவச் செலவிற்காக மோட்டார் வாகனச் சட்டம் சட்டப்பிரிவு 166-ன் கீழ் கோரப்படும் இழப்பீட்டிலிருந்து அந்தத் தொகையை கழிக்க முடியுமா?**




மோட்டார் வாகன விபத்தில் காயமடைந்த ஒருவர், Motor Accidents Claims Tribunal-ல் மோட்டார் வாகனச் சட்டம், 1988 சட்டப்பிரிவு 166-ன் கீழ் மருத்துவச் செலவு, வருமான இழப்பு, எதிர்கால வருமான இழப்பு, போக்குவரத்து செலவு, சிறப்பு உணவுச் செலவு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் இழப்பீடு கோரினார். அதே நேரத்தில், அவர் முன்கூட்டியே கட்டியிருந்த Mediclaim காப்பீட்டுத் திட்டத்தின் அடிப்படையிலும் அதே மருத்துவச் செலவிற்கான திருப்பிச் செலுத்துதலை பெற்றிருந்தார். இதனால், Tribunal வழங்கும் இழப்பீட்டிலிருந்து Mediclaim மூலம் பெற்ற

மருத்துவச் செலவை கழிக்க வேண்டுமா என்பது முக்கியமான சட்டக் கேள்வியாக எழுந்தது.

பம்பாய் உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அமர்வு, **The New India Assurance Co. Ltd. v. Dineshchandra Shantilal Shah, Vrajesh Navnitlal Desai v. K. Bagyam,** மற்றும் **Royal Sundaram Alliance Insurance Co. Ltd. v. Ajit Chandrakant Rakvi** ஆகிய தீர்ப்புகளில் இருந்த முரண்பட்ட கருத்துக்களை ஆய்வு செய்து, Mediclaim மூலம் பெறப்பட்ட தொகையை MACT வழங்கும் இழப்பீட்டிலிருந்து கழிக்க முடியாது என்று தீர்மானித்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து காப்பீட்டு நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

மேல்முறையீட்டாளரான காப்பீட்டு நிறுவனம், மருத்துவச் செலவு ஏற்கனவே Mediclaim மூலம் திருப்பிச் செலுத்தப்பட்டதால், அதே தலைப்பில் மீண்டும் இழப்பீடு வழங்குவது "double benefit" அல்லது இரட்டை பலனை ஏற்படுத்தும் என்றும், அது "just compensation" என்ற கோட்பாட்டிற்கு முரணானது என்றும் வாதிட்டது. **Reliance General Insurance Co. Ltd. v. Shashi Sharma** ((2016) 9 SCC 627) தீர்ப்பில், ஒரே இழப்பிற்காக இருமுறை இழப்பீடு வழங்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் வலியுறுத்தியிருப்பதை சுட்டிக்காட்டியது. மேலும் **Helen C. Rebello v. Maharashtra SRTC** ((1999) 1 SCC 90) தீர்ப்பில் உயிர்காப்பீடு, ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி போன்றவை விபத்துடன் தொடர்பில்லாத சுயாதீன உரிமைகள் என்பதால் மட்டுமே கழிக்கப்படவில்லை; ஆனால் Mediclaim நேரடியாக விபத்தால் ஏற்பட்ட மருத்துவச் செலவுடன் தொடர்புடையது என்பதால் அதனை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும் என்றும் வாதிட்டது. **Oriental Insurance Co. Ltd. v. R. Swaminathan** தீர்ப்பிலும், முதலாளியால் ஏற்கனவே செலுத்தப்பட்ட மருத்துவச் செலவை மீண்டும் வழங்கவில்லை என்பதையும் சுட்டிக்-காட்டியது.

மறுபுறம், காயமடைந்தவர் தரப்பில், Motor Vehicles Act-ன் கீழ் கிடைக்கும் இழப்பீடு என்பது சட்டத்தால் உருவாக்கப்பட்ட பரிகாரம்; Mediclaim

மூலம் கிடைக்கும் தொகை என்பது ஒருவர் தாமாகவே காப்பீட்டு பிரீமியம் செலுத்தி பெற்ற ஒப்பந்த உரிமை என்று வாதிடப்பட்டது. இரண்டிற்கும் மூலாதாரம் முற்றிலும் வேறுபட்டது என்பதால் ஒன்றை மற்றொன்றுடன் கலந்து பார்க்க முடியாது என்று கூறப்பட்டது. **Helen C. Rebello** ((1999) 1 SCC 90), **United India Insurance Co. Ltd. v. Patricia Jean Mahajan** ((2002) 6 SCC 281), **Sebastiani Lakra v. National Insurance Co. Ltd.** ((2019) 17 SCC 465) மற்றும் **Bradburn v. Great Western Railway Co.** ஆகிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, தவறு செய்த நபருக்கோ அல்லது அவரது காப்பீட்டு நிறுவனத்திற்கோ, பாதிக்-கப்பட்டவர் முன்கூட்டியே எடுத்தி-ருந்த காப்பீட்டின் பலன் கிடைக்கக் கூடாது என்றும் வாதிட்டனர். மேலும் **National Insurance Co. Ltd. v. Pranay Sethi** ((2017) 16 SCC 680) தீர்ப்பின் அடிப்படையில் "நியாயமான இழப்-பீடு" என்பது பாதிக்கப்பட்டவரின் இழப்பை ஈடுசெய்வதே நோக்கம்; அவர் தன்னுடைய சொந்த பணத்தில் வாங்கிய Mediclaim பலனை பறிப்பது அந்த நோக்கத்திற்கு எதிரானது என்-றும் வலியுறுத்தப்பட்டது.

உச்சநீதிமன்றம் முதலில் பல்வேறு உயர்நீதிமன்றங்கள் இந்தக் கேள்வியில் முற்றிலும் முரண்பட்ட தீர்ப்புகளை வழங்கியிருப்பதை பதிவு செய்தது. சில உயர்நீதிமன்றங்கள் Mediclaim தொ-கை கழிக்கப்படாது என்றும், சில உயர்நீதிமன்றங்கள் கழிக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருந்ததால், இந்தச் சட்டநிலையை ஒருமுறை தெளிவுபடுத்துவது அவசியம் என்று குறிப்பிட்டது.

அதன்பின் "double benefit" என்ற கோட்பாட்டை நீதிமன்றம் விரிவாக விளக்கியது. ஒரே இழப்பிற்காக இரண்டு முறை இழப்பீடு பெற அனுமதிக்க முடியாது என்பது சட்டத்தின் அடிப்படை என்றாலும், இரண்டு தொகைகளும் ஒரே சட்ட மூலத்திலிருந்து வருகிறதா அல்லது ஒன்றுக்கொன்று மாற்றாக வழங்கப்ப-டுகிறதா என்பதே முக்கியமான சோத-னை என்று கூறியது. ஒரு தொகை, அதே இழப்பிற்கு மாற்றாக வழங்-கப்படும் இழப்பீடாக இருந்தால் அது கழிக்கப்படலாம். ஆனால், அது

சுயாதீனமான உரிமை அல்லது தனித்துவமான சட்ட அல்லது ஒப்பந்த அடிப்படையிலான பலனாக இருந்தால் கழிக்க முடியாது என்று விளக்கியது.

இந்தக் கோட்பாட்டை பயன்படுத்தி Mediclaim மற்றும் MACT இழப்பீட்டை ஒப்பிட்ட நீதிமன்றம், Motor Vehicles Act-ன் கீழ் கிடைக்கும் இழப்பீடு என்பது தவறிழைத்தவரின் அலட்சியத்தால் ஏற்பட்ட சேதத்திற்கு சட்டம் வழங்கும் பரிகாரம்; ஆனால் Mediclaim என்பது ஒருவர் தமது பணத்தில் காப்பீட்டு பிரீமியம் செலுத்தி பெற்ற தனிப்பட்ட ஒப்பந்த உரிமை என்று தெளிவுபடுத்தியது. காப்பீடு எடுப்பதா வேண்டாமா என்பது தனிநபரின் விருப்பம்; காப்பீடு எடுத்ததற்காக அவர் பின்னர் பெற வேண்டிய சட்டப்பூர்வ இழப்பீட்டை இழக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறியது.

**Helen C. Rebello** தீர்ப்பில் கூறப்பட்ட கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்திய நீதிமன்றம், வருங்கால வைப்பு நிதி, Gratuity, Pension, Life Insurance ஆகியவை எவ்வாறு விபத்திலிருந்து சுயாதீனமான உரிமைகளோ, அதேபோல Mediclaim-மும் ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கும் சுயாதீனமான உரிமைதான் என்று கூறியது. அந்த உரிமையை கழிப்பது, காப்பீட்டு பிரீமியம் தொடர்ந்து செலுத்தியவரின் நன்மையைப் பறித்து, தவறு செய்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்திற்கு தேவையற்ற பலனை வழங்குவதாகும் என்றும் குறிப்பிட்டது.

மேலும், Motor Vehicles Act என்பது சமூகநல நோக்கத்துடன் இயற்றப்பட்ட பயனளிக்கும் சட்டம் என்பதால், அதன் நோக்கத்தை குறைக்கும் வகையில் Mediclaim தொகையை கழிக்க முடியாது என்றும் கூறியது. ஒருவர் தமது சொந்த செலவில் பெற்ற ஒப்பந்த பலனையும், சட்டத்தால் வழங்கப்படும் இழப்பீட்டையும் ஒன்றாகக் கருத முடியாது என்று நீதிமன்றம் வலியுறுத்தியது.

இறுதியாக, Mediclaim மூலம் பெறப்பட்ட மருத்துவச் செலவு, MACT வழங்கும் மருத்துவச் செலவிலிருந்து கழிக்கப்படாது என்றும், பம்பாய் உயர்நீதிமன்றத்தின் Full Bench வழங்கிய தீர்ப்பில் எந்த சட்டப்பிழையும்

இல்லை என்றும் உச்சநீதிமன்றம் தீர்மானித்து, காப்பீட்டு நிறுவனத்தின் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்-தது.

**இந்த தீர்ப்பின் மூலம், "Motor Vehicles Act-ன் கீழ் வழங்கப்படும் இழப்பீடு என்பது சட்டப்பூர்வமான பரிகாரம்; Mediclaim மூலம் கிடைக்கும் தொகை என்பது காப்பீட்டு ஒப்பந்தத்தின் கீழ் பெறப்படும் சுயாதீனமான உரிமை. எனவே Mediclaim மூலம் மருத்துவச் செலவு ஏற்கனவே பெறப்பட்டிருந்-தாலும், அந்தத் தொகையை மோட்-டார் விபத்து இழப்பீட்டிலிருந்து கழிக்க முடியாது; பாதிக்கப்பட்டவர் தனது சொந்த காப்பீட்டு ஒப்பந்தத்-தின் பலனை இழக்கச் செய்ய முடியாது" என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.**

---

IN THE SUPREME COURT OF INDIA

Civil Appeal No. ... of 2026 (Arising out of SLP (Civil) No. 18267 of 2025)

New India Assurance Company Limited v. Dolly Satish Gandhi and Another

Coram: Justice Sanjay Karol & Justice Vipul M. Pancholi

Date: 15.05.2026

Citation: 2026 INSC 498

--------------------------------

## #10#

**Bharatiya Sakshya Adhiniyam, 2023-ன் சட்டப்பிரிவு 63(4)-ன் கீழ் மின்னணு ஆவணங்களை நீதிமன்றத்தில் சான்றாக தாக்கல் செய்ய, Hash Value மற்றும் நிபுணரின் சான்றிதழை கட்டாயமாகக் கோருவது அரசியலமைப்புக்கு முரணானதா?**




மின்னணு ஆவணங்கள் இன்று பெரும்பாலான வழக்குகளில் முக்கிய சான்றுகளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மின்னஞ்சல்கள், காணொளிகள், ஒலிப்பதிவுகள், WhatsApp உரையாடல்கள், மின்னணு கோப்புகள் போன்றவை நீதிமன்றங்களில் அதிகளவில் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்நிலையில், Bharatiya Sakshya Adhiniyam, 2023-ன் சட்டப்பிரிவு 63(4) மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை (Schedule), மின்னணு ஆவணங்களை சான்றாக ஏற்கும்போது Part A-ல் அந்த ஆவணத்தின் Hash Value குறிப்பிடப்பட வேண்டும் என்றும்,

Part B-ல் ஒரு **நிபுணரின் சான்றிதழ்** பெறப்பட வேண்டும் என்றும் கட்டாயமாக்கியுள்ளது. இந்த புதிய நடைமுறை, சாதாரண வழக்காடிகளுக்கு தேவையற்ற சுமையை ஏற்படுத்துகிறது; மின்னணு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதே கடினமாகிவிடுகிறது; எனவே இந்த சட்டப்பிரிவு அரசியலமைப்புக்கு முரணானது என்று கூறி **Pune Bar Association** உச்சநீதிமன்றத்தில் அரசியலமைப்பு ஆணை மனு தாக்கல் செய்தது.

மனுதாரர் தரப்பில், இந்திய சாட்சியச் சட்டம், 1872-ன் சட்டப்பிரிவு 65B-ல் இருந்த நடைமுறையை விட, புதிய Bharatiya Sakshya Adhiniyam கூடுதல் நிபந்தனைகளை விதித்துள்ளது என்றும், குறிப்பாக Hash Value மற்றும் நிபுணரின் சான்றிதழ் இல்லாமல் மின்னணு ஆவணங்களை ஏற்க முடியாது என்பதால், சாதாரண வழக்காடிகளின் நீதியை அணுகும் உரிமை பாதிக்கப்படுகிறது என்றும் வாதிடப்பட்டது. மேலும், சென்னை உயர்நீதிமன்றத்தின் R. v. B & Anr. (2024 SCC OnLine Mad 6084) தீர்ப்பின்படி, Part B-ல் கையொப்பமிட வேண்டிய நிபுணர் Information Technology Act, 2000 சட்டப்பிரிவு 79A-ன் கீழ் அறிவிக்கப்பட்ட **Examiner of Electronic Evidence** ஆகவே இருக்க வேண்டும் என்று கூறப்பட்டதால், நாட்டில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நிபுணர்களையே அணுக முடியும்; இதனால் சட்டம் நடைமுறையில் செயல்படுத்த முடியாததாக மாறுகிறது என்றும் வாதிடப்பட்டது.

இதனை ஆய்வு செய்த உச்சநீதிமன்றம், தொழில்நுட்ப வளர்ச்சியால் மின்னணு ஆவணங்கள் அனைத்து துறைகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன என்றும், செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் Deepfake தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால் மின்னணு ஆவணங்களை மாற்றியமைப்பதும், போலியாக உருவாக்குவதும் எளிதாகிவிட்டது என்றும் குறிப்பிட்டது. இதுபோன்ற சூழ்நிலையில், மின்னணு ஆவணங்களின் **உண்மைத்தன்மை** (Authenticity) மற்றும் **முழுமைத்தன்மை** (Integrity) உறுதி செய்யப்-

படுவது மிகவும் அவசியம் என்பதால், Bharatiya Sakshya Adhiniyam புதிய பாதுகாப்பு முறைகளை கொண்டு வந்துள்ளது என்று நீதிமன்றம் விளக்கியது.

Hash Value குறித்து நீதிமன்றம் முக்கியமான விளக்கம் அளித்தது. ஒரு மின்னணு ஆவணத்திற்கு Hash Value என்பது அதன் **மின்னணு விரல்-ரேகை (Electronic Fingerprint)** போன்றதாகும். ஒரு ஆவணம் பின்னர் மாற்றப்பட்டுள்ளதா அல்லது அசலான நிலையிலேயே உள்ளதா என்பதை துல்லியமாகக் கண்டறிய அது உதவுகிறது. எனவே Part A-ல் Hash Value குறிப்பிட வேண்டும் என்ற நிபந்தனை, சட்டத்தின் நோக்கத்துடன் நேரடியாக தொடர்புடையது என்றும், அது தன்னிச்சையானதோ அல்லது காரணமற்றதோ அல்ல என்றும் நீதிமன்றம் தீர்மானித்தது. அதேபோல் Part B-ல் நிபுணரின் சான்றிதழை கட்டாயமாக்கியிருப்பதும், மின்னணு சான்றுகளின் நம்பகத்தன்மையை மேலும் உறுதிப்படுத்தும் பாதுகாப்பு அடுக்காகும்; எனவே அது அரசியலமைப்புக்கு முரணானதல்ல என்றும் கூறியது.

Part B-யில் யார் நிபுணராக கையொப்பமிடலாம் என்ற கேள்வியையும் நீதிமன்றம் விரிவாக ஆய்வு செய்தது. Bharatiya Sakshya Adhiniyam சட்டப்பிரிவு 39(1) மற்றும் 39(2)-ஐ ஒன்றாக வாசிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது. சட்டப்-பிரிவு 39(2)-ன் கீழ் Information Technology Act, 2000 சட்டப்பிரிவு 79A-ன் கீழ் அறிவிக்கப்பட்ட **Examiner of Electronic Evidence**-இன் கருத்து நிச்சயமாக ஏற்றுக்கொள்-ளத்தக்க நிபுணர் கருத்தாகும். ஆனால், அதுவே ஒரே வகை நிபுணர் என்று பொருள் கொள்ள முடியாது. கணினி அறிவியல் மற்றும் இணைய தடயவி-யல் (Cyber Forensics) துறையில் சிறப்புத் திறனும் அனுபவமும் கொண்ட வேறு நபர்களையும், நீதிமன்றம் அவர்களின் தகுதியை திருப்திகரமாக ஏற்றுக்கொண்டால், நிபுணர்களாகக் கருதி அவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ளலாம்; அத்த-கைய நபர்களும் Part B-யில் கையொப்பமி-

டலாம் என்றும் நீதி-மன்றம் தெளிவுபடுத்தியது.

இதனையடுத்து, சென்னை உயர்நீதி-மன்றம் R. v. B & Anr. வழக்கில் Part B-யில் கட்டாயம் Section 79A-ன் கீழ் அறிவிக்கப்பட்ட நிபுணரே கையொப்-பமிட வேண்டும் என்று கூறிய கருத்து, கட்டாய முன்னுதாரணமாக (Binding Precedent) கருதப்படக் கூடாது என்று உச்சநீதிமன்றம் விளக்கியது. இருப்பி-னும், இந்த சட்டக் கேள்வியில் இறுதியான தீர்ப்பை வழங்காமல், எதிர்காலத்தில் பொருத்தமான வழக்-கில் அந்தக் கேள்வியை முழுமையாக தீர்மானிக்க திறந்த நிலையில் வைத்துவிட்டு, இந்த ஆணை மனுவை முடித்துவைத்தது.

**இந்த தீர்ப்பின் மூலம், Bharatiya Sakshya Adhiniyam, 2023-ன் சட்டப்பிரிவு 63(4)-ன் கீழ் மின்னணு ஆவணங்களுக்கான Hash Value மற்றும் நிபுணரின் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டிருப்பது அரசிய-லமைப்புக்கு முரணானதல்ல; அவை மின்னணு சான்றுகளின் உண்மைத்-தன்மை மற்றும் முழுமைத்தன்மையை உறுதி செய்யும் நியாயமான பாது-காப்பு நடைமுறைகளாகும். மேலும், Part B-யில் கையொப்பமிடுவது Info-mation Technology Act, 2000 சட்டப்பிரிவு 79A-ன் கீழ் அறிவிக்கப்பட்ட Examiner of Eletronic Evidence-களுக்கு மட்டும் கட்டுப்படுத்-தப்படவில்லை; நீதிமன்றம் திருப்திய-டையும் வகையில் கணினி அறிவியல் மற்றும் இணைய தடயவியல் துறையில் சிறப்புத் திறன் பெற்ற பிற நிபுணர்களின் கருத்தும் ஏற்றுக்-கொள்ளப்படலாம் என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.**

---

IN THE SUPREME COURT OF INDIA

Writ Petition (Civil) No. 599 of 2026

Pune Bar Association v. Union of India & Others

Coram: Chief Justice Surya Kant, Jus-tice Joymalya Bagchi & Justice Vipul M. Pancholi

Date: 22.05.2026

Citation: 2026 (3) CTC 765

---

# #11#

**காலவரையத்தால் பாதிக்கப்பட்ட கடனைத் திருப்பித் தருவதாக வழங்கப்பட்ட காசோலை, இந்திய ஒப்பந்தச் சட்டம் சட்டப்பிரிவு 25(3)-இன் கீழ் நிறைவேற்றத்தக்க வாக்குறுதியாகுமா; காசோலை வங்கியில் சமர்ப்பிக்கப்படாத நிலையில், மாற்றுமுறை ஆவணச் சட்டம் சட்டப்பிரிவு 64-ஐ காரணம் காட்டி காசோலை எழுதிக் கொடுத்தவர் தம் பொறுப்பிலிருந்து விலக முடியுமா?**




இவ்வழக்கில், வாதி S.S. மணியன் அவர்கள், பிரதிவாதி K.V. முருகேசன் அவர்களிடமிருந்து ரூ.13,23,333 வசூலிக்கக் கோரி நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். 14.08.2011 அன்று ரூ.15,00,000 கிரையத் தொகைக்கு அசையாச் சொத்து குறித்து கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டு, அன்றே ரூ.8,00,000 முன்பணமாக வழங்கப்பட்டது. மீதமுள்ள ரூ.7,00,000-ஐ மூன்று ஆண்டுகளுக்குள் செலுத்தி கிரையத்தை நிறைவேற்ற வேண்டும் என்பது தரப்புகளுக்கிடை-

யேயான உடன்பாடு. ஆனால், மூல உரிமை ஆவணங்கள் வேறொரு தரப்பினரிடம் இருந்ததால், அவற்றை பிரதிவாதி மீட்டுப் பெற இயலவில்லை; அதனால் காலம் மேலும் இரண்டு ஆண்டுகள் வாய்மொழியாக நீட்டிக்கப்பட்டது. இறுதியில் நடுவர்கள் முன்னிலையில் நடந்த சமரசத்தில், பெற்ற முன்பணத்தை ரூ.2,00,000 வட்டியுடன் திருப்பித் தர பிரதிவாதி ஒப்புக்கொண்டு, HDFC Bank, Rasipuram branch கணக்கிலிருந்து 08.05.2016 தேதியிட்ட ரூ.10,00,000-க்கான காசோலையை (Ex.A.1) எழுதிக் கொடுத்தார். இரண்டு மாதங்களுக்குள் தொகையைச் செலுத்தி காசோலையைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டதால், வாதி அதை வசூலுக்குச் சமர்ப்பிக்கவில்லை; பின்னர் முன்பணமும் வட்டியும் திருப்பித் தரப்படாததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில், 14.08.2011 அன்று எந்த கிரைய ஒப்பந்தமும் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றும், Tiruchengode-இல் உள்ள Mahalakshmi Finance நிறுவனத்தில் மட்டுமே கடன் பெறப்பட்டு, அதற்காகக் காசோலையும் கையொப்பமிடப்பட்ட வெற்றுத் தாள்களும் ஒப்படைக்கப்பட்டன என்றும், அந்நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக வாதி இருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. விசாரணையில் வாதி P.W.1-ஆகவும், திரு. கணபதி அவர்கள் P.W.2-ஆகவும் சாட்சியமளித்தனர்; Ex.A.1 காசோலை ஆவணமாகக் குறிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பில் வாய்மொழி அல்லது ஆவண ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. முன்பணத்தைத் திருப்பித் தரும் நோக்கில் காசோலை வழங்கப்பட்டது நிரூபிக்கப்பட்டதாகவும், மாற்றுமுறை ஆவணச் சட்டம் சட்டப்பிரிவு 139-இன் கீழ் எழும் முன்அனுமானம் மறுக்கப்படவில்லை என்றும் கூறி, விசாரணை நீதிமன்றம் 05.04.2021 அன்று வழக்கை ஏற்று தீர்ப்பாணை வழங்கியது.

மேல்முறையீட்டில் பிரதிவாதி தரப்பில், மூல கிரைய ஒப்பந்தம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், வழக்கு காலவரையத்தால் பாதிக்கப்படும் என்றும், காசோலை ஒப்பந்தத்தின் மீதான ஒப்புதல் பதிவாகக் கருதப்படாததால்

அது காலவரையத்தை நீட்டிக்காது என்றும், நிரூபிக்கும் சுமையை மேல்முறையீட்டாளர் மீது மாற்றியது தவறு என்றும் வாதிடப்பட்டது. காசோலை வசூலுக்குச் சமர்ப்பிக்கப்-படாததால் சட்டப்பிரிவு 64-இன்படி வழக்கே நிலைக்காது என்றும் வாதிடப்பட்டு, **N.Jayamurugan v. M/s. Saravana Global Holdings Limited**, 2024 (6) CTC 455 தீர்ப்பு நம்பியிருக்கப்பட்டது. வாதி தரப்பில், காசோலை ஒப்பந்தச் சட்டம் சட்டப்-பிரிவு 25(3)-இன் வரம்பிற்குள் வருவ-தால் சமர்ப்பிப்பு கட்டாயமல்ல என்-றும், சமர்ப்பிக்கப்படாததால் இழப்பு ஏற்பட்டதாக நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வாதம் விசாரணை நீதிமன்றத்தில் எழுப்பப்படாமல் மேல்முறையீட்டு நிலையில் முதன்-முறையாக எழுப்பப்படுவதால் ஏற்க இயலாது என்றும் வாதிடப்பட்டு, **C.M. Sivaram v. V.S. Jayaram Mudaliar**, AIR 1966 Mad 297, **Benares Bank Limited v. Horumusji Pestonji**, AIR 1930 All 648, **K. Rajagopal v. R. Suman** (C.R.P.No.1054 of 2021) மற்றும் **Manik Ratan Guin v. Prokash Chandra Chattopadhyay**, AIR 1955 Cal 338 ஆகிய தீர்ப்புகள் மேற்கோள் காட்டப்பட்டன.

நீதிமன்றம் முதலில் ஆவண நிலையை ஆய்வு செய்தது. ஒப்பந்தமே இல்லை என்ற பொதுவான மறுப்பைத் தவிர, வழக்குரையில் கூறப்பட்ட குறிப்பிட்ட கூற்றுகளுக்குப் பதிலுரையில் தனிப்-பட்ட மறுப்பு இடம்பெறவில்லை; P.W.2-இன் முதன்மை விசாரணை குறுக்கு விசாரணையில் மறுக்கப்படா-ததால் அது ஒப்புக்கொள்ளப்பட்ட-தாகவே கருதப்பட வேண்டும் என்று கூறியது. காசோலை வழங்கப்பட்டது மறுக்கப்படாத நிலையில், அது Maha-lakshmi Finance நிறுவனத்திற்கே வழங்கப்பட்டது என்ற கூற்றுக்கு ஆதாரம் தாக்கல் செய்யப்படவில்லை; தரப்புகளுக்கிடையே பகைமை இல்-லை என்பது D.W.1 சாட்சியத்திலேயே ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில், பொய் வழக்கு தொடர வாதிக்குக் காரணம் இருந்திருக்க இயலாது என்று நீதிமன்றம் கண்டறிந்தது. காசோலை வழங்கப்பட்டபோதே மூல ஒப்பந்தம் பிரதிவாதியிடமே திருப்பி ஒப்படைக்-கப்பட்டது என்ற P.W.1-இன் சாட்சி-யத்தை ஏற்று, மூல ஒப்பந்தம் தாக்கல்

செய்யப்படாதது வழக்கைப் பாதிக்காது என்று கூறியது.

வாக்குறுதி குறித்த கேள்வியில், **K.K. Rm. Muthayee Achi v. A.K. Rm. S. Rm. Subbiah Chettiar**, AIR 1951 Mad 903 தீர்ப்பை நீதிமன்றம் நம்பியது; அதில், **Ganpathi Moodelly v. Munisami Moodely** (33 Mad 159) தீர்ப்பைத் தொடர்ந்து, ஆவணத்தில் அந்தக் கடன் குறிப்பிடப்படாவிட்டாலும், உண்மையான பிரதிபலன் காலவரையத்தால் பாதிக்கப்பட்ட கடன் என்பது காட்டப்பட்டால் சட்டப்பிரிவு 25-இன் கீழ் வாக்குறுதி நிறைவேற்றத்தக்கது எனக் கூறப்பட்டுள்ளது. ஒப்பந்தச் சட்டம் சட்டப்பிரிவுகள் 2(b), 2(d) மற்றும் 9-ஐ இணைத்துப் படித்த நீதிமன்றம், வாக்குறுதி வெளிப்படையாகவோ உள்ளுறையாகவோ இருக்கலாம் என்று கூறியது. மேல்முறையீட்டாளர் தரப்பே நம்பியிருந்த **N.Jayamurugan** வழக்கின் 35 முதல் 38 வரையிலான பத்திகள், சட்டப்பிரிவு 25(3)-இல் "express" என்ற சொல் இடம்பெறாததால் அதன் வரம்பை வெளிப்படையான வாக்குறுதிக்கு மட்டும் சுருக்க இயலாது எனக் கூறுவதைச் சுட்டிக்காட்டி, காசோலையை ஒப்படைத்ததே கடனைத் திருப்பித் தரும் உள்ளுறை வாக்குறுதி என்று முடிவு செய்தது. **K. Rajagopal v. R. Suman** தீர்ப்பையும் மேற்கோள் காட்டி, காசோலை வழங்கப்பட்டவுடனேயே அதை வைத்திருப்பவருக்கு வழக்குக் காரணம் எழுகிறது என்றும், அது வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டதா என்பது வழக்கின் நிலைப்பாட்டைப் பாதிக்காது என்றும் கூறியது.

சட்டப்பிரிவு 64 குறித்த வாதத்தில், அதில் உள்ள "other parties" என்ற சொற்றொடர் காசோலை எழுதிக் கொடுத்தவரை உள்ளடக்காது என்ற பொதுச் சட்டக் கொள்கையை நீதிமன்றம் விளக்கியது. **Ramchurn Mullick v. Lutchmeechund Radakissen**, (1811-72) 4 IR 198, **Robinson v. Hawksford**, (1846) 115 ER 1195, **Kanhayalal v. Ramkumar**, AIR 1956 Raj 129, **Harish Chander v. Ganga Singh**, AIR 1974 P&H 156, **Sumitra Baluja v. Bharat Chemical Industries**, (1983) 53 Comp Cas 561 மற்றும் **Abdul Majid v. Ganesh Das Kalooram Ltd.**, AIR 1954 Ori 124 ஆகிய தீர்ப்புகளை ஆய்வு செய்து,

சட்டப்பிரிவுகள் 37, 72, 76(d) மற்றும் 84-ஐ இணைத்துப் படித்தபோது, காசோலை எழுதிக் கொடுத்தவரே முதன்மைக் கடனாளி-யாகத் தொடர்கிறார் என்று கூறியது. சமர்ப்பிப்பு நடைபெறாததால் உண்மையான இழப்பு ஏற்பட்டதைப் பதிலுரையில் கூறி நிரூபிப்பது சட்டப்பிரிவு 76(d)-இன் விலக்கைப் பெற இன்றியமையாதது; **Subanamma Ninan v. George Veeran**, 2020 SCC OnLine Ker 4151 தீர்ப்பின்படி நியாயமான காலம் காசோலையின் தேதியிலிருந்தே கணக்கிடப்பட வேண்டும் என்றும் குறிப்பி-டப்பட்டது. **G.M. Sivaram v. Jayaram Mudaliar**, AIR 1966 Mad 297 நீதியர் ஈராயத் தீர்ப்பை மேற்கோள் காட்டி, பொறுப்பையே மறுக்கும் தரப்பு சமர்ப்பிப்பு விதியின் பின்னால் ஒதுங்க இயலாது என்றும், அத்தகையவர் சமர்ப்பிப்பு உரிமையைக் கைவிட்ட-தாகவே கருதப்படும் என்றும் கூறியது.

சமர்ப்பிக்கப்படாததால் ஏற்பட்ட இழப்பு குறித்து இவ்வழக்கின் பதிலு-ரையில் எந்தக் கூற்றும் இடம்பெறாத நிலையில், மேல்முறையீட்டு நிலையில் சட்டப்பிரிவு 64-ஐ காரணம் காட்டிப் பொறுப்பிலிருந்து விலக இயலாது என்று கூறி, மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பா-ணையை உறுதிப்படுத்தியது; செலவு-கள் குறித்து உத்தரவு இல்லை.

**இந்த தீர்ப்பின் மூலம், "காலவரையத்-தால் பாதிக்கப்பட்ட கடனுக்காக வழங்கப்படும் காசோலை, அந்தக் கடன் குறித்து ஆவணத்தில் வெளிப்ப-டையான குறிப்பு இல்லாவிட்டாலும், இந்திய ஒப்பந்தச் சட்டம் சட்டப்பிரிவு 25(3)-இன் கீழ் நிறைவேற்றத்தக்க உள்ளுறை வாக்குறுதியாகும்; சமர்ப்-பிப்பு நடைபெறாததால் இழப்பு ஏற்பட்டதைப் பதிலுரையில் கூறி நிரூபிக்காதவரை, காசோலை எழுதிக் கொடுத்தவர் முதன்மைக் கடனாளியா-கவே தொடர்வார்" என்ற சட்டக் கொள்கையை உயர்நீதிமன்றம் உறு-திப்படுத்தியுள்ளது.**

---

## IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

A.S. No. 16 of 2022 and C.M.P. No. 585 of 2022

K.V. Murugesan v. S.S. Maniyan

Coram: Justice N. Satthish Kumar

Date: 08.04.2025

Citation: 2025 (3) CTC 273

## #12#

**கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்ட நிலையில், அந்த ரத்து சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் கோராமல் ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு நிலைக்குமா; ஒப்பந்த காலக்கெடு முடிந்த பின்னர் கடன் பெற்று, ஆறு ஆண்டுகள் கழித்து மீதி தொகையை செலுத்தியது வாதியின் தயார்நிலையை நிரூபிக்குமா?**




இவ்வழக்கில், முதல் வாதி 29.08.2003 அன்று இரு ஆவணங்கள் மூலம் வாடகை ஒப்பந்தம் செய்து, ரூ.7,00,000 முன்பணமும் மாதம் ரூ.9,000 வாடகையும் என்ற நிபந்தனையில் வழக்குச் சொத்தில் இருந்து வந்தார். பின்னர் சொத்தை விற்க முன்வந்ததாகக் கூறி, 10.04.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் (Ex.A3) ஏற்பட்டதாகவும், அன்றே ரூ.22,00,000 முன்பணமாக பெறப்பட்டதாகவும் வாதிகள் தெரிவித்தனர். ஆனால் Ex.A3-க்கு நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதன் பின், 30.08.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் (Ex.A4) ரூ.16,48,000 கிரை-

யத் தொகைக்கு எழுதிக் கொடுக்கப்பட்டு, ரூ.3,20,000 முன்பணமாக பெறப்பட்டது; மீதி ரூ.13,28,000 இரண்டு மாதங்களுக்குள், அதாவது 30.10.2007-க்குள் செலுத்தப்பட வேண்டும் என நிபந்தனை இருந்தது. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரி O.S.No.15 of 2008 தாக்கல் செய்யப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில், Ex.A3 புனையப்பட்ட ஆவணம் என மறுக்கப்பட்டது. வாதி வாடகைதாரர் மட்டுமே என்றும், கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அனுபவ உரிமை ஒப்படைக்கப்படவில்லை என்றும், வாடகை செலுத்தாத காரணத்தால் R.C.O.P.No.22 of 2008 தொடரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. காலக்கெடுவுக்குள் வாதி மீதி தொகையை செலுத்தத் தவறியதால், Ex.A5 அறிவிப்பு மூலம் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகவும், எனவே ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு நிலைக்காது என்றும் வாதிடப்பட்டது. விசாரணை நீதிமன்றம், Ex.A5 ஒருதலைப்பட்சமான ரத்து என்றும் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றும் கூறி 31.07.2015 அன்று வழக்கை ஏற்று தீர்ப்பாணை வழங்கியது. அதனை எதிர்த்தே இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

நீதியர் ஈராயம் (Division Bench) முதலில் வழக்கின் நிலைத்தன்மையை ஆய்வு செய்தது. உச்சநீதிமன்றத்தின் **Sangita Sinha v. Bhawana Bhardwaj** (2025 INSC 450) தீர்ப்பில், **I.S.Sikandar v. K.Subramani** (2013) 15 SCC 27, **A.Kanthamani v. Nasreen Ahmed** (2017) 4 SCC 654 மற்றும் **R.Kandasamy v. T.R.K.Saraswathy** ஆகிய தீர்ப்புகளுக்கு இடையிலான நிலைப்பாடு ஆராயப்பட்டு, ஒப்பந்தம் வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே ரத்து செய்யப்பட்டிருந்தால், அந்த ரத்து சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் கோராத நிலையில் ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு நிலைக்காது எனக் கூறப்பட்டுள்ளது. கீழ்நீதிமன்ற ஆவணங்களையும் வழக்குரையையும் பரிசீலித்த நீதிமன்றம், Ex.A5 அறிவிப்பு சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை எந்த

இடத்திலும் கோரப்படவில்லை எனக் கண்டறிந்து, விளம்புகை பரிகாரம் கோராதது வாதியின் வழக்கை பாதிக்கும் என முடிவு செய்தது.

ஒருதலைப்பட்ச ரத்து குறித்த விசாரணை நீதிமன்றத்தின் கண்டறிதலும் ஏற்கப்படவில்லை. இந்திய ஒப்பந்தச் சட்டம் சட்டப்பிரிவு 39-இன்படி, மற்றொரு தரப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முன்வராத நிலையில் ஒப்பந்தத்தை ரத்து செய்யும் உரிமை பிரதிவாதிக்கு இருந்தது என்றும், ரத்து செய்வதற்கு முன் அறிவிப்பு வழங்க வேண்டும் என்ற நிபந்தனை ஒப்பந்தத்தில் இல்லை என்றும் நீதிமன்றம் கூறி, அந்தக் கண்டறிதலை நீக்கியது.

தயார்நிலை மற்றும் விருப்பம் குறித்த ஆய்வில், வாதியின் குறுக்கு விசாரணை ஒப்புதல்களே அவருக்கு எதிராக அமைந்தன. ஒப்பந்த காலக்கெடு 30.10.2007 அன்று முடிந்த நிலையில், வங்கிக் கடன் 12.11.2007 அன்றுதான் அனுமதிக்கப்பட்டது என வங்கி மேலாளர் (P.W.3) தெரிவித்தார். காலக்கெடுவை நீட்டித்துத் தருமாறு பிரதிவாதிக்கு எந்த அறிவிப்பும் அனுப்பப்படவில்லை; கடன் அனுமதிக்கப்பட்ட பின்னரும் கிரையத்தை நிறைவேற்றத் தயாராக இருப்பதாக அறிவிப்பு அனுப்பப்படவில்லை; Ex.A6 பதில் அறிவிப்பிலும் தயார்நிலை குறித்து எதுவும் கூறப்படவில்லை. தயார்நிலை என்பது தரப்பினரின் முயற்சியையும் பொருளாதார சூழ்நிலையையும் குறிக்கிறது; விருப்பம் என்பது கிரையத்தை நிறைவேற்றும் நோக்கத்தைக் குறிக்கிறது என நீதிமன்றம் விளக்கியது. ஒப்பந்தம் 18.12.2007 அன்று ரத்து செய்யப்பட்ட நிலையில், மீதி ரூ.13,28,000 ஆறு ஆண்டுகள் கழித்து 2013-ல் மட்டுமே நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டது; எனவே கிரையத்தை நிறைவேற்றும் பொருளாதார சூழ்நிலை வாதிக்கு இருந்ததில்லை என முடிவு செய்யப்பட்டது.

பகுதி நிறைவேற்றத்தின் அடிப்படையில் அனுபவ உரிமை ஒப்படைக்கப்பட்டது என்ற வாதமும் ஏற்கப்படவில்லை. Ex.A4 பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதும், சொத்து மாற்றுச் சட்டம் சட்டப்பிரிவு 53(A)-இன் பயனை பெற ஆவணம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ப-

தும் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும், அனுபவ உரிமை ஒப்படைப்பு குறித்து Ex.A4-ல் எந்தக் குறிப்பும் இல்லை; வாடகைக்கு விடுபவர் மற்றும் வாடகைதாரர் என்ற உறவே தொடர்வதாக வாதியே குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டிருந்தார். வழக்கு Ex.A4 அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டிருந்தும், நீதிமன்றக் கட்டணம் Ex.A3-ல் உள்ள தொகையின் அடிப்படையில் செலுத்தப்பட்டது; வாடகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கை உள்ளிட்ட பிற வழக்குகளில் வாதி முரண்பட்ட நிலைப்பாடுகளை எடுத்திருந்தார்.

ஏற்றதை ஆற்றக் கோரும் பரிகாரம் நீதிமன்றத்தின் முடிவிற்கு உட்பட்டது என்றும், கிரையத்தை நிறைவேற்றி தனது தயார்நிலையை நிரூபிக்கும் பொறுப்பு வாங்குபவரையே சாரும் என்றும் நீதிமன்றம் கூறியது. ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்ட பின், விளம்புகை பரிகாரம் இல்லாத நிலையில் Ex.A4 சட்டத்தின் பார்வையில் "non est" ஆகிவிடுகிறது எனத் தெரிவித்து, குறித்தவகை பரிகார சட்டம் சட்டப்பிரிவு 16(c)-இன் தேவைகளையும் வாதி பூர்த்தி செய்யவில்லை என முடிவு செய்யப்பட்டது. இதனடிப்படையில், மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு, 31.07.2015 தேதியிட்ட தீர்ப்பும் தீர்ப்பாணையும் ரத்து செய்யப்பட்டு, O.S.No.15 of 2008 தள்ளுபடி செய்யப்பட்டது. நீதிமன்றத்தில் செலுத்தப்பட்ட தொகையை திரும்பப் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், "வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டிருந்தால், அந்த ரத்து சட்டப்படி செல்லாது என்ற விளம்புகை பரிகாரம் கோராமல் ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு நிலைக்காது; காலக்கெடுவுக்குள் தொகையை செலுத்தாமலும், தயார்நிலையை காட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்காமலும் இருப்பவர் இப்பரிகாரத்தை பெற உரிமை இல்லை" என்ற சட்டக் கொள்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

---

## BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT

A.S.(MD) No. 234 of 2015 and
M.P.(MD) No. 1 of 2015

Gana.Kannappan v. G.Mohanlal Patel & Another

Coram: Justice RMT.Teekaa Raman & Justice N.Senthil Kumar

Date: 25.04.2025

Citation: 2025 (3) CTC 306

--------------------------------

# #13#

***பதிவு செய்யப்படாமலும் முத்திரைத்தாள் இல்லாமலும் உள்ள ஆவணம் ஒன்றை ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கில் சான்றாக ஏற்க முடியுமா; வாய்மொழி கிரைய ஒப்பந்தத்திற்கான சான்றாக அதனை ஏற்க பதிவுச் சட்டம், 1908 சட்டப்பிரிவு 49-இன் விதிவிலக்கு வழிவகுக்கிறதா?***




இவ்வழக்கில், 01.01.2000 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் பிரதிவாதி தமது சொத்தை விற்க ஒப்புக்கொண்டு, ரூ.5,000 பகுதி பணத்தைப் பெற்றுக்கொண்டு மேல்முறையீட்டாளருக்கு அனுபவ உரிமையையும் வழங்கியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்தார். பின்னர் 01.09.2002 அன்று சென்ட் ஒன்றுக்கு ரூ.550 வீதம் விற்பனை நடைபெற வேண்டும் என இருதரப்பும் ஒப்புக்கொண்டதாகவும், அதன் தொடர்ச்சியாக ரூ.10,000 செலுத்தி மீதத் தொகையையும் அவ்வப்போது செலுத்தியதாகவும் கூறப்பட்டது. கிரைய பத்திரம் எழுதிக் கொடுக்க

பிரதிவாதி நடவடிக்கை எடுக்காததால், மதுராந்தகம் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றக் கோரியும் நிரந்தர தடையுத்தரவு கோரியும் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு நிலுவையில் இருந்தபோது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(3) மற்றும் சட்டப்பிரிவு 151-இன் கீழ் இடைக்-கால மனு தாக்கல் செய்யப்பட்டு, 01.01.2000 தேதியிட்ட ஆவணத்தை பதிவில் ஏற்று குறியிட அனுமதி கோரப்பட்டது. அந்த ஆவணம் பிற ஆவணங்களுடன் கலந்துவிட்டதால் அதனை முன்பே தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதன் நகல் வழக்குரையுடன் இணைக்கப்பட்டி-ருந்ததால் பிரதிவாதிக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை நீதிமன்றம் 21.04.2015 அன்று அம்மனுவை தள்ளுபடி செய்தது. மூல ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கான காரணங்கள் ஏற்கத்தக்கவை அல்ல என்றும், அந்த ஆவணம் முத்திரைத்தாள் இல்லாத-தாலும் பதிவு செய்யப்படாததாலும் இந்திய முத்திரைத்தாள் சட்டம் சட்டப்பிரிவு 35 மற்றும் பதிவுச் சட்டம், 1908 சட்டப்பிரிவு 17 ஆகியவற்றால் தடைசெய்யப்படுகிறது என்றும் கூறப்-பட்டது. அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் மறுஆய்வு மனுவையும், அதே காரணத்தை அடிப்படையாகக் கொண்டு உயர்நீதி-மன்றம் 26.02.2021 அன்று தள்ளுபடி செய்தது.

உச்சநீதிமன்றத்தில் அறிவிப்பு அனுப்-பப்பட்டும் பிரதிவாதிகள் ஆஜராக-வில்லை. மேல்முறையீட்டாளர் தரப்-பில், வாய்மொழி கிரைய ஒப்பந்தத்தை உறுதிசெய்யும் ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதிக்கும் பதிவுச் சட்டம் சட்டப்பிரிவு 49-இன் விதிவிலக்கை கீழ்நீதிமன்றங்கள் கவனத்தில் கொள்-ளவில்லை என வாதிடப்பட்டது. இதற்கு ஆதரவாக **S. Kaladevi v. V.R. Somasundaram** (2010) 5 SCC 401 தீர்ப்பு மேற்கோள் காட்டப்பட்டது. மேலும், சம்பந்தப்பட்ட ஆவணம் 01.01.2000 அன்று எழுதிக் கொடுக்-கப்பட்டதால், சட்டப்பிரிவு 17(1A)-ஐ அடிப்படையாகக் கொள்வது சரியல்ல எனவும் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றம் சட்டப்பிரிவு 49-ஐ ஆய்வு செய்தது. பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணம் பதிவு செய்யப்படாவிட்டால் அது அசையா சொத்தை பாதிக்காது என்பதும், அத்தகைய பரிவர்த்தனைக்கு சான்றாக ஏற்கப்படாது என்பதும் பொது விதி; ஆனால் அதன் விதிவிலக்கு, பதிவு செய்யப்படாத ஆவணம் ஒன்றை ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கில் ஒப்பந்தத்திற்கான சான்றாகவும், பதிவு தேவைப்படாத இணை பரிவர்த்தனைக்கான சான்றாகவும் ஏற்க வழிவகுக்கிறது என நீதிமன்றம் பதிவு செய்தது. இதே நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் Kaladevi தீர்ப்பை நீதிமன்றம் தனது காரணத்திலும் ஏற்றுக்கொண்டது; முடிவுற்ற விற்பனைக்கான சான்றாக அல்லாமல், வாய்மொழி கிரைய ஒப்பந்தத்திற்கான சான்றாக மட்டுமே என்ற குறிப்புடன் அத்தகைய ஆவணத்தை ஏற்க முடியும் என அத்தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது.

மேலும், 01.01.2000 தேதியிட்ட ஆவணம் வழக்குரையில் குறிப்பிடப்பட்டிருப்பதும், அதன் நகல் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டிருப்பதும் நீதிமன்றத்தால் கவனத்தில் கொள்ளப்பட்டது. வாய்மொழி கிரைய ஒப்பந்தத்திற்கான சான்றாக மட்டுமே அந்த ஆவணம் பயன்படுத்தப்படும் என்பதால், அதனை தாக்கல் செய்ய அனுமதிக்கலாம் என நீதிமன்றம் முடிவு செய்தது. அதே நேரத்தில், அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை என்றும், அதன் பொருத்தப்பாடு மற்றும் செல்லுபடித்தன்மை குறித்து சட்டப்படி எதிர்வாதம் எழுப்ப பிரதிவாதிக்கு உரிமை உண்டு என்றும், அவற்றை விசாரணை நீதிமன்றம் பரிசீலித்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில், உயர்நீதிமன்ற உத்தரவு ரத்து செய்யப்பட்டு, மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது; ஆவணத்தை குறியிட கோரிய இடைக்கால மனு அனுமதிக்கப்பட்டது. செலவுகள் தொடர்பாக உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

**இந்த தீர்ப்பின் மூலம், "பதிவு செய்யப்படாத ஆவணம் ஒன்றை, முடிவுற்ற விற்பனைக்கான சான்றாக**

அல்லாமல் வாய்மொழி கிரைய ஒப்பந்தத்திற்கான சான்றாக, ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கில் பதிவுச் சட்டம் சட்டப்பிரிவு 49-இன் விதிவிலக்கின் கீழ் ஏற்க முடியும்; பதிவின்மை மட்டுமே அதனை தாக்கல் செய்வதற்குத் தடையாகாது" என்ற சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE SUPREME COURT OF INDIA

Civil Appeal No. 6543 of 2025 (Arising out of SLP (C) No. 10893 of 2021)

Muruganandam v. Muniyandi (Died) through LRs.

Coram: Justice Pamidighantam Sri Narasimha & Justice Joymalya Bagchi

Date: 08.05.2025

Citation: 2025 INSC 652

--------------------------------

## #14#

**கிரைய ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட காலவரம்பு முடிந்த பின்னரும் நீண்ட காலம் நடவடிக்கை எடுக்காமல் இருந்த வாங்குபவர் ஏற்றதை ஆற்றக் கோரும் பரிகாரம் பெற முடியுமா; உண்மையான கிரைய ஒப்பந்தத்தை மறைத்து வழக்கு தொடுத்தமை அப்பரிகாரத்தைத் தடுக்குமா?**




வழக்குச் சொத்து முதலில் முத்துசாமி அவர்களுக்கு உரியதாக இருந்தது; அவர் இறந்த பின் அவரது வாரிசு-களான சுப்புராய கவுண்டர் மற்றும் முத்து குமாரசாமி அவர்களுக்கு உரி-மையாகி, அவர்களுக்கிடையே நடந்த வாய்மொழிப் பாகப்பிரிவினையின்-படி வழக்குச் சொத்து சுப்புராய கவுண்டர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்-டது. 1965ஆம் ஆண்டு அவர் இறந்த பின் சொத்து அவரது வாரிசுகளின் ஏழு கிளைகளுக்கு உரிமையானது. அக்கிளைகளுக்கு இடையிலான பாகப்பிரிவினை வழக்கில் 23.06.1999 அன்று முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு பங்குகள் விளம்-

புகை செய்யப்பட்டன; அதனை எதிர்த்த மேல்முறையீடு உயர்நீதி-மன்றத்தில் நிலுவையில் இருந்தது.

இந்நிலையில், ஏழு கிளைகளில் ஐந்து கிளையினரிடமிருந்து மொத்தம் 5/7 பங்கை வாங்குவதற்காக வாதிகள் நான்கு கிரைய ஒப்பந்தங்களை எழுதிக் கொண்டனர். 19.06.2004 அன்று முதல் வாதியும் 1, 2 பிரதிவாதிகளும் ரூ.7,14,288 மதிப்பில் 1/7 பங்கிற்கு ஒப்பந்தம் செய்து ரூ.3,57,144 முன்பணமாகச் செலுத்தப்பட்டது; 23.06.2004 அன்று இரண்டாம் வாதியும் மூன்றாம் பிரதிவாதியும் ரூ.7,60,000 மதிப்பில் மற்றொரு 1/7 பங்கிற்கு ஒப்பந்தம் செய்தனர்; 16.09.2004 அன்று 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளின் 2/7 பங்கிற்கு ரூ.14,28,100 மதிப்பில் ஒப்பந்தம் ஏற்பட்டு ரூ.5,00,000 முன்பணம் செலுத்தப்பட்டது; 30.09.2004 அன்று 8 முதல் 13 வரையிலான பிரதிவாதிகளின் 1/7 பங்கிற்கு ரூ.7,54,285 மதிப்பில் ஒப்பந்தம் ஏற்பட்டு ரூ.2,00,000 செலுத்தப்பட்டது. ஒவ்வொரு ஒப்பந்-தத்திலும் ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கான காலவரம்பு பத்து நாள் முதல் அறுபது நாள் வரை குறிக்கப்-பட்டிருந்தது.

காலவரம்பு கடந்த பின், 16.10.2004 மற்றும் 20.12.2004 தேதிகளில் 1, 3 பிரதிவாதிகள் மீதித் தொகையைச் செலுத்தி கிரைய பத்திரம் எழுதிக் கொள்ளுமாறு அறிவிப்புகள் அனுப்-பினர்; அவற்றிற்கு பதில் அறிவிப்பு அனுப்பிய வாதிகள், ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாவிட்டால் ஏற்ற-தை ஆற்றக் கோரி வழக்கு தொடுப்பதாகத் தெரிவித்தனர். 8 முதல் 13 வரையிலான பிரதிவாதிகள் 05.01.2005 அன்று அனுப்பிய மறு-மொழி அறிவிப்பில், 30.09.2004 ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகவும், ரூ.25,000 காசோலை பணப்பற்றாக்-குறை காரணமாக திரும்பியதாகவும் குறிப்பிடப்பட்டது. இதற்குப் பிறகும் நடவடிக்கை எடுக்காத வாதிகள், 15.06.2007 அன்றுதான் மீதித் தொகையான ரூ.25,02,385 செலுத்தி கிரைய பத்திரம் பதிவு செய்து 5/7 பங்கின் அனுபவ உரிமை வழங்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்தனர்.

பிரதிவாதிகள் தரப்பில், ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தாமதம் வாதிகள் தரப்பிலேயே ஏற்பட்டதாகவும், 16.09.2004 அன்று 2/7 பங்கிற்கு ரூ.14,28,100 மதிப்பிலான ஒப்பந்தத்துடன் ரூ.26,78,100 மதிப்பிலான மற்றொரு ஒப்பந்தமும் எழுதப்பட்டு அது வழக்குரையில் மறைக்கப்பட்டதாகவும் வாதிடப்பட்டது. வாதிகள் தரப்பில், ஒரே ஒப்பந்தம் மட்டுமே ஏற்பட்டதாகவும், பாகப்பிரிவினை மேல்முறையீடு நிலுவையில் இருந்ததாலும், முதல் வாதி மாரடைப்புக்கு உள்ளாகி அறுவை சிகிச்சை செய்து கொண்டதாலும், பிரதிவாதிகள் ஆவணங்களைத் தரவில்லை என்பதாலும் தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை நீதிமன்றம், ஒப்பந்த காலம் முடிந்து சுமார் மூன்றரை ஆண்டுகளுக்குப் பின் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், வாதிகள் தங்கள் பங்கை நிறைவேற்றத் தயாராகவும் விருப்பமாகவும் இருந்ததை நிறுவவில்லை என்றும், சொத்து பிரிக்கப்படாத நிலையில் இருந்ததால் அனுபவ உரிமை கோரிக்கை ஏற்கத்தக்கதல்ல என்றும், காசோலை திரும்பியது தொகை செலுத்தும் திறன் இல்லாததைக் காட்டுகிறது என்றும் கூறி வழக்கை தள்ளுபடி செய்து, முன்பணத்தை ஆண்டுக்கு 7.5 விழுக்காடு வட்டியுடன் திரும்பச் செலுத்த உத்தரவிட்டது. அதனை எதிர்த்தே வாதிகள் இந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்தனர்.

நீதியர் ஈராயம் (Division Bench), அசையா சொத்து கிரைய ஒப்பந்தங்களில் காலம் ஒப்பந்தத்தின் சாரமாகக் கருதப்படுவதில்லை என்ற கொள்கையை **Chand Rani v. Kamal Rani** [(1993) 1 SCC 519] தீர்ப்பிலிருந்து எடுத்துக் கொண்டாலும், **Saradamani Kandappan v. S. Rajalakshmi** [(2011) 12 SCC 18] தீர்ப்பில் **K.S. Vidyanadam v. Vairavan** [(1997) 3 SCC 1] தீர்ப்பைப் பின்பற்றி வலியுறுத்தப்பட்ட நிலைப்பாட்டைச் சுட்டிக்காட்டியது; அதாவது, தரப்பினர் ஒப்பந்தத்தில் காலவரம்பை குறித்திருந்தால் அதற்கு பொருள் உண்டு என்பதால் அதனைப் புறக்கணிக்க முடியாது; வாங்குபவரின் தயார்நிலை குறித்து நீதிமன்றங்கள் கூடுதல் கவனத்துடன் ஆய்வு செய்ய

வேண்டும்; காலவரையறைச் சட்டத்தின்படி மூன்று ஆண்டு கால அவகாசம் இருப்பதால் மட்டுமே ஒப்பந்த மீறலுக்குப் பின் உடனடியாக வழக்கு தொடுக்காமல் காத்திருப்பதை ஏற்க முடியாது. மேலும், **P. Meenakshisundaram v. P. Vijayakumar** [(2018) 15 SCC 80] தீர்ப்பின் அடிப்படையில், குறித்தவகை பரிகார சட்டம் சட்டப்பிரிவு 16(c)-இன்படி ஒப்பந்த தேதி முதல் வழக்கு விசாரணை நாள் வரை தயார்நி-லையை நிறுவும் கடமை வாதிகளுக்கே உள்ளது எனக் கூறப்பட்டது.

இவ்வழக்கின் சான்றுகளை ஆய்வு செய்தபோது, முதல் வாதி நிலவணிகத்தில் ஈடுபட்டவர் என்பதும், பங்குதாரர்களின் உரிமை குறித்து தாம் திருப்தி அடைந்ததாக அவரே ஒப்புக்கொண்டதும் பதிவு செய்யப்பட்டது. எனவே கூடுதல் ஆவணங்கள் தரப்படாததால் தாமதம் ஏற்பட்டது என்ற கூற்று ஏற்கப்படவில்லை. பாகப்பிரிவினை மேல்முறையீடு நிலுவையில் இருந்ததும் தாமதத்திற்கு காரணமாகாது; ஏனெனில் வாங்க எண்ணிய பங்குகள் குறித்து உரிமைத் தகராறு இருக்கவில்லை. 05.01.2005 அன்றே இறுதி மறுமொழி அறிவிப்பு கிடைத்த பின்னும் 2007ஆம் ஆண்டு வரை அமைதி காக்கப்பட்டமை, காலவரையறைக்குள் நுழைவதற்காக மட்டுமே வழக்கு தொடுக்கப்பட்டதைக் காட்டுவதாகக் கண்டறியப்பட்டது.

ரூ.25,000 காசோலை தொடர்பாக, அது முன்பணத்தின் பகுதி என்பதை நிறுவும் சுமை 8 முதல் 13 வரையிலான பிரதிவாதிகளுக்கே உள்ளது என்றும், அவர்களது ஒப்பந்தத்தில் ரூ.2,00,000 ரொக்கமாகப் பெறப்பட்டது மட்டுமே பதிவாகியுள்ளதால், தொகை செலுத்தும் திறன் வாதிகளுக்கு இல்லை என்ற விசாரணை நீதிமன்றத்தின் கண்டறிதல் நிலைத்து நிற்காது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் 16.09.2004 அன்று இரண்டு ஒப்பந்தங்கள் எழுதப்பட்டதற்கு சாட்சியாக கையொப்பமிட்ட D.W.3-இன் சாட்சியத்தையும், ஏழாம் பிரதிவாதியின் சாட்சியத்தையும் மறுக்கும் வகையில் வாதிகள் எந்த எதிர்ச் சான்றும் அளிக்கவில்லை; அதிக மதிப்பிலான உண்மையான ஒப்பந்தம் வழக்குரையில் இடம்பெறவில்லை.

எனவே பொருள்முக்கியத்துவம் வாய்ந்த உண்மையை மறைத்தமை நிறுவப்பட்டதாகக் கொள்ளப்பட்டது.

அனுபவ உரிமை தொடர்பாக, சொத்து பிரிக்கப்படாத நிலையில் இருப்பதாலும், ஏழு பங்குகளில் ஐந்து பங்குகள் மட்டுமே வாங்கப்பட்ட-தாலும், நிலத்தை சமன்படுத்தியது மட்டும் செல்லத்தக்க அனுபவ உரிமையாகாது எனக் கூறி விசாரணை நீதிமன்றத்தின் கண்டறிதல் ஏற்கப்பட்-டது. இறுதியாக, விசாரணை நீதிமன்-றத்தின் 24.10.2014 தீர்ப்பும் தீர்ப்பா-ணையும் உறுதி செய்யப்பட்டு மேல்-முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது; தொடர்புடைய மனு முடிக்கப்பட்டது; செலவுகள் குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

**இந்த தீர்ப்பின் மூலம், ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட காலவரம்பைப் புறக்க-ணித்து, மீறல் ஏற்பட்ட பின்னும் நீண்ட காலம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பவர் தயார்நிலையையும் விருப்-பத்தையும் நிறுவியதாகக் கொள்ள முடியாது; உண்மையான கிரைய ஒப்பந்தத்தை மறைத்து வழக்கு தொடுப்பவருக்கு ஏற்றதை ஆற்றக் கோரும் பரிகாரம் வழங்கப்பட மாட்டாது என்ற கொள்கை உறுதிப்-படுத்தப்பட்டுள்ளது.**

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

A.S. No. 68 of 2015 and C.M.P. No. 7734 of 2017

Mohan & Another v. Kasthuri & Others

Coram: Justice C.V. Karthikeyan & Justice K. Rajasekar

Date: 18.06.2026

Citation: [2026 (4) CTC 577]

-------------------------------

## #15#

**வழக்கு விசாரணையிலோ மேல்முறையீட்டிலோ எழுப்பப்படாத சொத்து அளவு தொடர்பான வாதத்தை நிறைவேற்று நடவடிக்கையில் புதிதாக எழுப்ப முடியுமா; பிரிக்கப்படாத 2/3 பங்கு மட்டுமே கிரையம் செய்யப்பட்ட நிலையில் தீர்ப்பாணை பெற்றவர்கள் நேரடி அனுபவ உரிமை கோர முடியுமா?**




ஈரோடு மாவட்டம், திண்டல் கிராமம், R.S.No.20/2-ல் உள்ள 3.36 ஏக்கர் நிலம் தொடர்பான கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில், ஈரோடு முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் O.S.Nos.51 மற்றும் 52 of 2011 என்ற எண்ணில் ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்குகள் 2011-ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டன. தாய், மகன் மற்றும் மகள் ஆகியோர் பிரதிவாதிகளாக இருந்து எதிருரை (written statement) தாக்கல் செய்து வழக்கை எதிர்த்தனர். வழக்குகளில் தீர்ப்பாணை வழங்கப்பட்டது; அதற்கு எதிரான A.S.Nos.288 முதல் 290 வரையிலான மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன;

உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சிறப்பு அனுமதி மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டு விசாரணை நீதிமன்றத்தின் கண்டறிதல்கள் உறுதி செய்யப்பட்டன.

இரண்டாம் பிரதிவாதி தீர்ப்பாணையை ஏற்று 22.09.2014 அன்று தமது 1/3 பங்கிற்கு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்தார். மீதமுள்ள 2/3 பங்கிற்கு நீதிமன்றமே 06.08.2025 அன்று ஈரோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.5011/2025 ஆக பதிவு செய்து கிரைய பத்திரத்தை நிறைவேற்றியது. அதன் அடிப்படையில் அனுபவ உரிமை பெற தீர்ப்பாணை பெற்றவர்கள் EP Nos.2 மற்றும் 3 of 2024-ல் E.A.No.3 of 2025 தாக்கல் செய்தனர்.

தீர்ப்பாணை கடனாளிகள் 1 மற்றும் 3 ஆகிய பார்வதி அவர்களும் நீலாவதி அவர்களும் சொத்தின் அளவு குறித்து ஆட்சேபனை எழுப்பினர். R.S.No.20/2-ல் தமக்குச் சொந்தமான மொத்த நிலம் 3.98 ஏக்கர் என்றும், அதில் 3.36 ஏக்கர் மட்டுமே வழக்குச் சொத்து என்றும், மீதமுள்ள 62 சென்ட் தமக்கே உரியது என்றும் வாதிடப்பட்டது. கிரைய பத்திரத்தின் மூலம் மாற்றப்பட்டது 3.36 ஏக்கரில் 2/3 பிரிக்கப்படாத பங்கு (UDS) மட்டுமே; அதற்கு தனி எல்லைகள் வரையறுக்கப்படவில்லை; எனவே தீர்ப்பாணை பெற்றவர்களுக்குக் கிடைப்பது அடையாள அனுபவ உரிமையே அன்றி நேரடி அனுபவ உரிமை அல்ல; நேரடி அனுபவ உரிமை வேண்டுமெனில் பாகப்பிரிவினை கோரி உரிய நீதிமன்றத்தை அணுக வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வழக்குரைகளையும் தமது சட்டபூர்வ எதிர்வாதத்தையும் கருத்தில் கொள்ளாமல் நிறைவேற்று நீதிமன்றம் உத்தரவிட்டது நடைமுறைப் பிழை என்றும் வாதிடப்பட்டது.

தீர்ப்பாணை பெற்றவர்கள் தரப்பில், வழக்கு அட்டவணையுடன் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதிகள் எதிருரை தாக்கல் செய்திருந்தும், 62 சென்ட் தமக்கு உரியது என்ற கூற்று அதில் எங்கும் இடம்பெறவில்லை என்றும், அனைத்து நிலைகளிலும் வழக்கு அட்டவணை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், இரண்டாம் பிரதிவாதி தீர்ப்பாணையை ஏற்று

2014-ல் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்த நிலையில் தீர்ப்பாணை கடனாளிகளுக்கு இடையூறு செய்யும் உரிமை இல்லை என்றும் வாதிடப்பட்டது. இதற்கு ஆதரவாக **Pradeep Mehra v. Harijivan J. Jethwa (2023 SCC Online SC 1395)** தீர்ப்பு மேற்கோள் காட்டப்பட்டது; ஏற்கனவே முடிவு-செய்யப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்-து நிறைவேற்று நடவடிக்கையின் போது புதிய வாதங்களை எழுப்ப தீர்ப்பாணை கடனாளிகளுக்கு உரிமை இல்லை என்பது அதன் கண்டறிதல். அத்தீர்ப்பில் **Barkat Ali v. Badrinarain (2008) 4 SCC 615** மேற்கோள் காட்டப்பட்டு, முன்தீர்ப்புத் தடை கொள்கை தனித்தனி நடவடிக்கைக-ளுக்கு மட்டுமன்றி ஒரே நடவடிக்-கையின் அடுத்தடுத்த நிலைகளுக்கும் பொருந்தும் என்றும், முந்தைய நிலையில் ஆட்சேபனை எழுப்பாமல் அந்நிலை நிறைவடைய அனுமதித்-தவர்கள் பின்னர் அதே ஆட்சேப-னையை எழுப்பி முந்தைய நிலைக்குத் திரும்ப முடியாது என்றும் விளக்கப்-பட்டுள்ளது; இது அடையாள முன்-தீர்ப்புத் தடையின் அடிப்படையாகும்.

மேலும் **Maurice W. Innis v. Lily Kazrooni @ Lily Arif Shaikh (2026 SCC Online SC 554)** தீர்ப்பும் அத்தரப்பில் மேற்கோள் காட்டப்பட்டது.

ஆவணங்களை ஆய்வு செய்த உயர் நீதிமன்றம், வழக்கு அட்டவணையுடன் 2011-ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உச்ச நீதிமன்றம் வரை உறுதி செய்யப்பட்டுள்ளதையும், 1/3 பங்கிற்-கான கிரைய பத்திரம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு மீதமுள்ள 2/3 பங்கிற்கே நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதையும் பதிவு செய்-தது. சொத்தின் அளவு குறித்து எழுப்பப்பட்ட ஆட்சேபனை ஏற்கன-வே நிராகரிக்கப்பட்டுள்ளது; 62 சென்ட் தனியாகக் கிடைக்கும் என்பது எதிருரையிலோ, விசாரணை நீதிமன்-றத்தில் முன்வைக்கப்பட்ட எதிர்வா-தத்திலோ, மேல்முறையீட்டு நீதிமன்-றத்திலோ கூறப்படவும் இல்லை, நிரூபிக்கப்படவும் இல்லை. நிறை-வேற்று நிலையில் மட்டும் புதிதாக எழுப்பப்படும் இத்தகைய வாதம், மேற்கோள் காட்டப்பட்ட தீர்ப்பில் வகுக்கப்பட்ட கோட்பாட்டின்படி நிலைநிற்காது என நீதிமன்றம் கண்-

டறிந்தது. வருவாய்த்துறை அதிகாரிகள் உரிய சரிபார்ப்புக்குப் பின் அயன் பட்டா வழங்கியுள்ளதையும், தற்போது வழக்குச் சொத்திற்கான பட்டா தீர்ப்பாணை பெற்றவர்கள் பெயரிலேயே உள்ளதையும், அது இந்நீதிமன்றத்தின் நீதியர் ஈராயத்தால் (Division Bench) உறுதி செய்யப்பட்டுள்ளதையும் நீதிமன்றம் பதிவு செய்தது.

இதன் அடிப்படையில், சொத்தில் 2/3 பங்கிற்கு தீர்ப்பாணை பெற்றவர்களே உரிமை உடையவர்கள் என்றும், நிறைவேற்று நீதிமன்றத்தின் உத்தரவில் தலையிட வேண்டிய தேவை இல்லை என்றும் கூறி, இரு உரிமையியல் மறுசீராய்வு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. செலவுகள் தொடர்பாக உத்தரவு எதுவும் வழங்கப்படவில்லை; தொடர்புடைய இதர மனுக்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

**இந்த தீர்ப்பின் மூலம், "வழக்கு விசாரணையிலும் மேல்முறையீட்டிலும் எழுப்பாமல் விடப்பட்ட சொத்து அளவு தொடர்பான வாதத்தை நிறைவேற்று நிலையில் புதிதாக எழுப்ப முடியாது; உச்ச நீதிமன்றம் வரை உறுதி செய்யப்பட்ட தீர்ப்பாணையின் நிறைவேற்றுதலைத் தடுக்க தீர்ப்பாணை கடனாளிகளுக்கு உரிமை இல்லை" என்பதை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.**

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

CRP Nos. 2457 and 2459 of 2026 and CMP Nos. 10477 and 10481 of 2026

Parvathy & Another v. A. Ranjith / E.K. Palanisami

Coram: Justice T.V. Thamilselvi

Date: 16.06.2026

Citation: 2026 (4) CTC 593

---